NATIONAL LIBRARY OF SRI LANKA 15/09/2023 11:13:31

Registered as a Newspaper

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி
மீண்டும் திருமலையில்
வீரபாலன் கம்பனி
194, பிரதான வீதி, திருகோணமலை.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-50

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி
மீண்டும் திருமலையில்
வீரபாலன் கம்பனி
194, பிரதான வீதி, திருகோணமலை.

சுடர் 2: யாழ்ப்பாணம் பிரபவ ஆ புரட்டாதி மீ 11 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 03 (27 — 09 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 260



திலீபனின் பூதவுடலுக்கு மக்கள் நேற்று அஞ்சலி செலுத்துவதை படத்தில் காணலாம். (படம்-ஜெயம்)

## சாத்வீகப் போர்
## தொடர்ந்து நடக்கும்
### புலிகள் நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப் 27
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்களில் இன்னும் திருப்திகரமான முடிவு ஏற்படாததால் விடுதலைப் புலிகள் இயக்கம் தனது போராட்டத்தை தொடர்ந்து நடத்த முடிவுசெய்துள்ளது.

முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து உண்ணாவிரதம் அனுஷ்டிப்பர்.

ஆர்ப்பாட்டங்கள், மறியல் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### ● பிரபாவுக்கு தகவல்
### எட்டியபோது---

பலாலி, செப். 27
திலீபன் இறந்த செய்தியை பாலாலி பேச்சுவார்த்தைக்குச் சென்ற இடத்தில் திரு. மாத்தையா (ஸ்ரீ) தலைவர் திரு. பிரபாகரனிடம் தெரிவித்தார்.

உடனடியாக அவரது

(6ம் பக்கம் பார்க்க)



திலீபனின் பூதவுடலைக் கண்டு தாய்மார்கள் கதறிக் கண்ணீர் விட்ட காட்சி மனதை உருக்குவதாக இருந்தது. [படம்-ஜெயம்]

தாய்மார் விழுந்து கும்பிட்டனர்; இளைஞர், யுவதிகள் ஏனையோர் கதறிக் கதறி அழுதனர்

# வீரசுவர்க்கம் எய்திய திலீபனுக்கு
# மக்கள் வெள்ளம் இறுதி அஞ்சலி

## தமிழ் மண் எங்கும் இன்று முதல் செவ்வாய் வரை துக்க அனுஷ்டிப்பு
## பூதவுடலை குடாநாடு முழுவதிலும் ஊர்வலமாக எடுத்துச்செல்லஏற்பாடு

— எம். பேரின்பநாயகம், கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 27
தமிழ் மக்கள் நலன்களுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து, கடந்த 1 நாட்களாக, உண்ணாநோன்பிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் திலீபன் நேற்று முற்பகல் வீர சுவர்க்கம் அடைந்தார்.

அவரது பூதவுடல், உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்ட அதே மேடையில நேற்று மாலை இறுதி அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

லட்சக்கணக்கான மக்கள் வெள்ளம் போலத் திரண்டு, இரவிரவாக வீரவேங்கை திலீபனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இறுதி அஞ்சலி செலுத்திய மக்களில், தாய்மாாகள் தங்கள் சொந்தப் புதல்வனை இழந்தவர்கள் போலத் தேம்பித் தேம்பி அழுதார்கள், மற்றும் பலர் வீர சுவர்க்கம் அடைநத வீரபறவனின் பூதவுடலை விழுந்து கும்பிட்டு அஞ்சலி செலுத்தினர். இளைஞர்கள், யுவதிகள் மற்றும் ஏனையோர் பூதவுடலைக் கண்டதும் மனம் வெதும்பித் தேம்பித் தேம்பி அழுதனர்.

வீர சுவர்க்கமான திலீபனின் பூதவுடலை யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்ல ஏற்பாடாகி உள்ளது.

திலீபனுக்கு அஞ்சலி செலுத்து முகமாக இன்று முதல் செவ்வாய் வரையான மூன்று நட்களுக்கு தமிழ்ப் பிரதேசம் எங்கும் துக்கம் அனுஷ்டிக்குமாறு புலிகள் இயககம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

ஐந்து கோரிக்கைகளை இந்திய அரசிடம் முன் வைத்து, திரு. திலீபன் கடந்த 15ம் திகதி காலை தமது சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தது தெரிந்ததே அவர் தண்ணீரும் அருந்தாது உண்ணாவிரதம் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

திரு. திலீபன் நேற்று முற்பகல் 10.55 மணிக்கு வீர சுவர்க்கம் எய்தினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)



திலீபனின் பூதவுடல் வைக்கப்பட்ட பேழை மக்கள் அஞ்சலிக்காக மேடையைநோக்கி விடுதலைப்புலிப் பிரமுகர்களினல் தூக்கிச்செல்லப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். [படம்-ஜெயம்]

## இந்திய ராணுவம் முகாம்களுக்குள் முடங்கியது !

யாழ்ப்பாணம், செப். 27
இந்திய இராணுவத்தினரை முகாம்களுக்குள் தங்கி இருக்குமாறு திடீர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திலீபனின் மரணத்தை அடுத்து அசம்பாவிதம் எதுவும் நிகழலாம் எனக் கருதியே இந்திய இராணுவத்தினரை வெளியேற வேண்டாம் என உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்றும் பகல்வரை நகரின் பல பாகங்களிலும் காணப்பட்ட இந்திய இராணுவத்தினர் இந்த உத்தரவை அடுத்து முகாம்களுக்குள் முடங்கிக் கொண்டனர். (இ-10)

## இந்தியப் படையினரை துன்புறுத்தாதீர்
### வீதித்தடைகளை அகற்றுக பிரபாகரன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப். 27
பொதுஉடைமைகளைச் சேதப்படுத்த வேண்டாமென்றும், வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட வேண்டாமென்றும் இந்திய சமாதானப் படையினரை துன்புறுத்த வேண்டாமென்றும், வீதித் தடைகளைஅகற்றுமாறும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.வே.பிரபாகரன் பொதுமக்களை வேண்டியுள்ளார்.

அகிம்சை வழியை தழுவி தனது உயிரை அர்ப்பணித்த திலீபனுக்காக சாத்வீக முறையில் துக்கத்தை அனுஷ்டிக்குமாறும் திரு.பிரபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

### உண்ணாவிரதம் இருந்த பெண் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், செப்.27
திலீபனின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய செல்வி சிவா துரையப்பா யாழ் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (இ-10)

### சுபநேரம்

27-09-1987
புரட்டாதி 11
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9.02 முதல் 10.32வரை
ராகுகாலம்:-
4.32 முதல் 6 02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## டிக்ஸிற் ஜனதிபதியை நேற்றுச் சந்தித்தார்

இந்தியத் தூதர் டிக்ஸிற நேற்றுமாலை ஜனதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

பலலி இராணுவ முகாமில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் இரண்டாம் தடவையாக நேற்றுப் பேச்சுக்களை நடத்திவிட்டு கொழும்பு திரும்பியவுடன் திரு. டிக்ஸிற் ஜனதிபதியைச் சந்தித்தார்.

பிரபாகரனுடன் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை திரு. டிக்ஸிற் ஜனதிபதியிடம் தெரிவத்தார்.

இதனிடையில், இன்னும் சில தினங்களில் யாழ்ப்பாணம் மற்றும் பகுதிகளிலும் அமைதி திரும்பும் என்று திரு. டிகஸிற் செய்தியாளர்களிடம நம்பிக்கை தெரிவித்தார். (இ-எ)

### பாலகுமார் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப், 27
ஈரோஸ் பிரமுகர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



நினைக்க அழுகை வருகுது.........
ஈழத் தமிழற்றை அரசியல் வரலாற்றிலை ஒப்பற்ற தியாகியாகிவிட்ட திலீபனுக்கு என்ரை நெஞ்சு கனிந்த கண்ணீர் அஞ்சலிகள்!

### ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், செப் 27
கடந்த 12 நாட்களாக நீர் அருந்தாது உண்ணாவிரதம் அனுஷ்டித்து வீரமரணம் அடைந்த தோழர் திலீபனுக்கு எமது இயக்கத்தின் சார்பில் அஞ்சலி செலுத்துகிறோம்.

ஈரோஸ் சார்பாக திரு. பாலகுமார் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் வரித்துக் கொண்ட இலட்சியத்திற்காக, தனது இயக்கம் முடிவுசெய்த போராட்ட வழி நின்று இறுதி வரை போராடி மரணித்த அவரை சக போராளி இயக்கம் என்ற வகையில் நாம் கௌரவிக்கிறோம்.

எமது இயக்கத்தோடு

(6ம் பக்கம் பார்க்க)

### பஸ்களுக்கு தீ வைப்பு

யாழ்ப்பாணம், செப். 27
திலீபனின் மரணச் செய்தி கேட்ட மக்கள் ஆத்திரமடைந்து அரச பஸ்களை தீயிட்டுக் கொளுத்தினர்கள்.

நேற்று யாழ் பஸ்நிலையத்தில் இரண்டு பஸ்கள் தீ மூட்டப்பட்ட தாயினும் பின்னர் போராளிகள் தலையீட்டினுல் தீ அணைக்கப்பட்டது.

எனினும் கந்தர்மடம் சந்திக்கு சமீபமாக ஒரு பஸ்ஸுக்கு மக்கள் தீ வைத்து எரித்தனர்.

மிருசுவில் பகுதியிலும் இரண்டு பஸ்கள் தீமூட்டி எரிக்கப்பட்டதாக அறியப்பட்டது.

மிருசுவிலில் தீக்கிரையாக்கப்பட்ட பஸ்களில் ஒன்று காரைநகர் டிப்போவுக்கு சொந்த

(6-ம் பக்கம் பார்க்க)

உங்களுக்கு அவசியமான
மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாகங்களை

நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
★ அனேக ரக சீட் வகைகள் ரூ. 75/- இலிருந்து
★ சொக் அப்சோபர் ★ மட்காட்
★ ஹெல்மெட் வகைகள் ★ கிறஷ்பார் வகைகள்
★ விசேட அலங்காரப் பொருட்கள்

உட்பட பல நூற்றுக்கணக்கான அவசியமான பொருட்களை மிக நியாயமான விலையில் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே தொடர்பு கொள்ளவும்.

KELANI VALLEY MOTOR CO.,
634, Maradana Road,
COLOMBO-10.
T-phone : 597005

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

NATIONAL LIBRARY OF SRI LANKA NLSL 15/09/2023 11:13:31


## சின்னஞ் சிறு விளம்பரங்கள்

**விற்பனைக்கு**

உங்கள் தேயிலைத் தேவைகளுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். விக்னு ரீ ரேடர்ஸ் மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில்மேற்கு, கொக்குவில். (1713)

நல்ல தேயிலை கிடைப்பதில்லையே என்ற கவலையை விடுங்கள். இதோ ஆனந்தா தேயிலையை அறிமுகம் செய்கிறோம். ஆனந்தா ரீ ரேடர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம். (1714)

**பிறந்தநாள் வாழ்த்து**

பலாலி ராஜா பவானி தம்பதிகளின் அன்புப் புதல்வி சுகன்ஜா இன்று தனதுமுதலாவது பிறந்த தினத்தைக் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணு வசந்த், அப்பப்பாமார், அப்பம்மாமார், சித்தப்பாமார், சித்தி, அத்தைமார், பாட்டி, முல்லைத்தீவு, மாமாமார், அன்ரிமார் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர். [1513]

மானிப்பாய் மருதமஹால் தங்கராஜா தம்பதிகளின்தவப் புதல்வன் மருதராஜன் 27- 9- 87 இன்று ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். இவரை மருதடியான் அருளுடன் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென்று பெற்றோர், அப்பம்மா, அக்கா, சித்தப்பா, பெரியம்மா, மாமா குடும்பத்தவர்களும், அச்சாஅன்றி மற்றும் உற்றார் உறவினர்களும் வாழ்த்துகின்றனர். [1707]

**WANTED**

600 Sq. feet office space required, preferably upstairs within half a mile radius from Jaffna Main Bus stand. Contact immediately. Mack Travels, No. 8. 1st Lane, Point Pedro Road, Jaffna.

**சேவை**

**BUYING & SELLING**

The following Electric goods and household items are available for sale. Electric oven, Electric hotplate, Typewriter, Fridge and other Household goods We buy household goods Electric items and other office equipment furnitures Etc. Mack Travels, No. 8, 1st Lane, Point - Pedro, Jaffna.

Selvam Photo Colour, Achchuvely சிறந்த முறையிலான வெளிப்புற கலர்ப்படப்பிடிப்புக்கும் குறைந்த செலவில் கலர்ப்படங்களைப் பிரதி பண்ணவும் எம்மை நாடுங்கள்:- செல்வம் போட்டோ கலர் ஏ. எம். திருச் செல்வம்' அச்சுவேலி. [1716]

புத்தம் புதிய அல்லது மறுசீரமைக்கப்பட்ட மினிபஸ், கார், வான், ELF டிரக், மோட்டார் சைக்கிள் ஆகியன யப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து தரப்படும். தொடர்பு கொள்க. K.T. நாதன், பஸ் நிலையம் முன்பாக, நெல்லியடி, கரவெட்டி [1530]

**தேவை**

சகல துறைகளிலும் தொடர்பு கொள்ளக் கூடிய பேனு நண்பர்கள் தேவை. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்: க. நந்தகுமாரன், ''மங்களகிரி'' ஏழாலை மேற்கு, சுன்னுகம். (1780)


# தரம்குறைந்த அரிசி விநியோகத்துக்கு முற்றுப்புள்ளி

கொழும்பு, செப். 27 தரம் குறைந்த அரிசியைச் சந்தைப்படுத்துவது, எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டில் அனுமதிக்கப்படமாட்டாது.

இப்படி கொழும்பு அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் இது தொடர்பாக அரிசி ஆலை உரிமையாளர்கள், வர்த்தகர்களுக்குச் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தரமற்ற அரிசியைச் சந்தைப்படுத்தும் அரிசி ஆலை உரிமையாளர்கள், வர்த்தகர்களுக்கு மூவாயிரம் ரூபா அபராதம் அல்லது மூன்று மாதச் சிறைத் தண்டனை அல்லது இரண்டும் முதல் தடவை விதிக்கப்படும்.

இரண்டாவது தடவை குற்றம் புரிவோருக்கு 7,500 ரூபா அபராதம் அல்லது 6 மாதச் சிறை அல்லது இரண்டும் விதிக்கப்படும். (ஓ-எ)

## பருத்தித்துறையில் மின் கட்டணம் உயர்வு

பருத்தித்துறை செப் 27 பருத்தித்துறை நகர சபை மாதாந்தம் 150 அலகுக்கு மேற்பட்ட மின்சாரத்தைப் பாவிக்கும் சகல மின் பாவனையாளர்களிடமிருந்தும் 15 வீத கட்டண உயர்வை அறவிடவுள்ளது.

இதுபற்றி பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. க. சண்முகநாதன் பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட மின்பாவனையாளருக்கு அறிவித்துள்ளது.

அவர் தெரிவித்திருப்பதாவது:-

1987 ஆம் ஆண்டு மே மாதம் முதல் எரிபொருள் சீராக்கல் கட்டணமாக மின்பாவனையாளரிடமிருந்து மேலதிகமாக 15 வீதத்தை அறவிடுமாறு இலங்கை மின்சார சபை பணித்துள்ளது.

ஆகவே 1987 மே மாதம் தொடக்கம் மறு அறிவித்தல் வரை எரிபொருள் சீராக்கல் கட்டணம் அறவிடப்படும்.

ஆனால் சமய சம்பந்தமான கட்டடங்கள், கோவில், தேவாலயம், பள்ளிவாசல், 150 அலகுகளுக்கு மேற்படாத வீட்டுப் பாவனையாளர்கள் ஆகியோரிடம் எரிபொருள் சீராக்கல் கட்டணம் அறவிடப்பட மாட்டாது'' எனத் தெரிவித்துள்ளார்.

(உ-118)

## புஷ்பராஜின் உயிர் மீட்சிக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், செப்.27 தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் கலாநிதி எம். ஜி. ஈ. புஷ்பராஜின் உயிர் மீட்சிக் கூட்டங்கள் இன்றும் நாளையும் நாளை மறுநாளும் (27, 28, 29) சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகின்றன.

இன்றும் நாளையும் மாலை 4. 30 மணிக்கு பாடல்களுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும்.

29ஆம் திகதி மாலை 3. 00 மணிக்கு பரியோவான் தேவாலயத்தில் வேதப்படிப்புடன் நிகழ்ச்சிஆரம்பமாகும்

## இலங்கை விட்ட தவறை நாம் விடமாட்டோம்

### கூட்டணி சம்பந்தன் கூறுகிறார்

கொழும்பு, செப். 27 சிறுபான்மையினர் உரிமை குறித்து இலங்கை அரசு விட்ட தவறை நாம் விடமாட்டோம்.

இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு முன்னுதாரணமாக புதிய தமிழ் மாகாணத்தின் ஆட்சி அமையும்.

— இப்படி திருகோணமலையின் முன்னுள் எம். பி இரா. சம்பந்தன் சொன்னார்.

கொழும்பு மாளிகாவத்தை இஸ்லாமிய கலாசார நிலையத்தில் நடந்த கருத்தரங்கில் பேசுகையில் திரு. சம்பந்தன் இப்படிச் சொன்னார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் நலன்களைப் பாதுகாக்க தமிழர் விடுதலைக் கூட்டணி உறுதி பூண்டுள்ளது வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சகல இன மக்களும் சமத்துவமாக நடத்தப்படுவர்.

—இப்படி திரு. சம்பந்தன் மேலும் சொன்னார்.

கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் சொன்னதாவது;

ஒப்பந்தம் ஒரு ஈலும்புக்கூடு. அதற்கு இரத்தமும் சதையும் இப்போது தான் சேர்க்கப்படுகின்றன.

தமிழர் பாதுகாப்புக்குப் பலம் பொருந்திய அமைப்பு ஒன்றுக்காகக் கூட்டணி 40 ஆண்டுகளாகப் போராடிவந்தது. அந்த அமைப்பு தமிழ் பேசும் தமிழர்களின் நலன்களை மட்டுமல்ல, தமிழ் பேசும் முஸ்லிம்களின் நலன்களையும் பாதுகாக்கும்.

ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள தற்காலிக இணைப்பைச் சர்வசன வாக்கெடுப்பு மூலம் நிரந்தரமாக்க தமிழரும் முஸ்லிமும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

— இப்படி திரு. சிவசிதம்பரம் சொன்னார்.

(உ-எ)

## புத்தகக் கண்காட்ி

கொழும்பு, செப். 27 அமெரிக்க மக்கள் எவ்வாறு ஒருவரோடொருவர் தொடர்புகொள்கிறார்கள் என்பதையும், தகவல் மற்றும் தொலைத் தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சி, அவர்களின் தொழில், விளையாட்டு முதலான துறைகளோடு எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளது என்பதையும் விளக்கும் புத்தகக் கண்காட்சி ஒன்று கொழும்பிலுள்ள அமெரிக்க நிலையத்தில் ஆரம்பமாகிநடைபெற்று வருகிறது.

## ★ நவராத்திரி விழா ★

யாழ்ப்பாணம், செப். 27 கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திர சேகரர் விநாயகர் ஆலயத்தில் புதன் கிழமை தொடக்கம் நவராத்திரி பூசை ஆராதனைகள் நடைபெறுகின்றன.

தொடர்ந்து 10 தினங்கள் விசேட அபிஷேக பூசைகளும், சரஸ்வதி தோத்திரப் பாடலும் இடம் பெறும். (ஓ)

★ ★

**கொழும்புத்துறையில்**

யாழ்ப்பாணம், செப் 27 கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி அருள்மிகு அம்மன் ஐயனார் தேவஸ்தானத்தில் புதன்கிழமை முதல் ஒன்பது தினங்கள் நவராத்திரி விழா ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தினமும் விசேட அபிஷேக பூசையும் பஜனை-கூட்டுப் பிரார்த்தனையும் சகல கலா வல்லி மாலை தோத்திரப் பாடலும் இடம் பெற்று வருகின்றன. (ஓ)

★ ★

**தெல்லிப்பளையில்**

சுன்னுகம், செப் 27 தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நவராத்திரி விழா நடைபெற்று வருகிறது.

விஜயதசமி விழா 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு விசேஷ பூசையுடன் ஆரம்பித்து9 00மணிக்கு வன்னி வாழை வெட்டு நடைபெற்று மு. ப. 10 மணிக்கு வித்திபாரம்பம் (ஏடு தொடக்கல்) நடைபெறும். (ஓ)

★ ★

**நவராத்திரி**

புங்குடுதீவு, செப் 27 புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தில் மாணவர்களால் நவராத்திரிப் பூசை கொண்டாடப் படுகிறது.

விஜயதசமியன்று புதிய மாணவர்களின் வித்தியாரம்பமும் இடம் பெறும். (ஓ-131)

★ ★

## தினேஷின் அறிக்கை

கொழும்பு, செப் 27 சுகயீனம் காரணமாகவோ, அல்லது நாட்டில் இல்லாத காரணத்தினுலோ ஜனுதிபதி தனது கடமைகளைச் செய்ய முடியாது இருந்தபின், பிரதமரைப் பதில் ஜனுதிபதியாக நியமிக்கக் கூடியதான திருத்தம் ஒன்றை அரசமைப்புச் சட்டத்தில் செய்ய தனிநபர் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ளது.

மஹறகம எம்பி திரு. தினேஷ் குணவர்த்தன முன்னறிவித்தல் கொடுத்துள்ள அப்பிரேரணை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளது.

பிரதமர் பதில் ஜனுதிபதியானுல் அவர் தமது இடத்துக்கு பதில் பிரதமர் ஒருவரை அமைச்சரவையில் இருந்து நியமிக்கலாம்.

இப்படி அப் பிரேரணை கூறுகின்றது.

(உ-எ)

## ரயில் நிலையம் சேதம்

இராணுவச் சீருடை அணிந்த கோஷ்டி ஒன்று பரசங்கவேவா ரயில் நிலையத்தை முற்றுகையிட்டு அங்கிருந்த பொருள்களுக்குச் சேதம் விளைவித்து. நிலையத்தில் இருந்த தொலைத் தொடர்பு இயந்திரத்தையும் அக்கோஷ்டி எடுத்துச் சென்றதாகத் தெரிய வந்தது. [இ-எ]

## பொருளியலாளன் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், செப்.27 யாழ்பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நாளை 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு '' பொருளியலாளன் '' வெளியீட்டு விழாநடைபெறும்.

கலாநிதி வி. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும். இவ்விழாவினையாழ்பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. இராசரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

அறிமுக உரையை கலாநிதி சபாஜெயராசாவும், வெளியீட்டாளர் உரையை பொருளியலாளன் பிரதம ஆசிரியர் திரு. ந. பேரின்பநாதனும், நன்றியுரையை திரு. மா. சின்னத்தம்பியும்ஆற்றுவார்.

**ஒப்பந்தத்தை தோற்கடிக்க**

## 40 எம்.பிக்கள் எதிர்த்து வாக்களித்தால் போதும் என்கிறார் ஸ்ரீமாவோ

கொழும்பு, செப். 27 இந்திய - இலங்கை ஒப்பந்தச் சட்டத்தை பெரும்பான்மை வாக்குகளினுல் தோற்கடிக்க வேண்டியதில்லை, நாடாளுமன்றத்தில் 40 எம்பிக்கள் எதிர்த்து வாக்களித்தாலே போதும். சட்டம் செயலற்றதாகி விடும்.

சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்கண்டவாறு சொன்னார்.

மாத்தறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் திருமதி பண்டாரநாயக்கா இப்படித் தெரிவித்தார். (இ-எ)


## அறிவித்தல்

**Lanka Cement Limited, Kankesanthurai**

**TENDER No : LCL / TCEM / 01 / 87**

பொதி நிரப்பு நிலையத்தில் (Packing Plant) இருந்து சீமெந்துப் பொதிகளை கொழும்பு, கண்டி, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எமது உப களஞ்சியங்களுக்கு லொறி வண்டிகளில் ஏற்றிச் செல்லுதல் :-

கேள்விப் பத்திரங்கள் சேர்க்கப்படும் திகதி நீடிப்பு.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் 07-10-87 மாலை 3. 30 மணிக்குப் பின் விநியோகிக்கப் படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் 09-10-87 அன்று காலை 10. 00 மணிக்கு முன் உதவி பொது முகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டகத்தில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 09-10-87 அன்று காலை 10. 30 மணிக்குத் திறக்கப் படும்.

பிரதி பொது முகாமையாளர்,
லங்கா சிமெந்து லிமிட்டெட்,
25-09-87 காங்கேசன்துறை.



றெட்பானு ஸ்தாபனம்
முல்லைமாவட்ட அரசாங்க அதிபருடன்
இணைந்து நடத்தும்

## முல்லைமாவட்ட விதவைகளுக்கும் ஊனமுற்றோருக்குமான புனர்வாழ்வுத் திட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணிபுரியும் றெட்பானு ஸ்தாபனம் முல்லை மாவட்ட அரச அதிபருடன் இணைந்து 1983 ஜூலை வன்செயலின் பின்பு இன்று வரை பாதிக்கப்பட்ட முல்லை மாவட்ட விதவைகளுக்கும் ஊனமுற்றோருக்கும் புனர்வாழ்வு அளிக்க உள்ளது. கீழ்க்கண்ட விபரங்களைப் பூர்த்தி செய்து 15-10-1987ஆம் திகதிக்கு முன்பாக கிராமசேவையாளரின் சிபாரிசுடன் உதவி அரசாங்க அதிபர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.


1. விண்ணப்பிப்பவரின் முழுப்பெயர்:-
2. வயது:-
3. பிள்ளைகளின் விபரங்கள்:-
   (1) திருமணமாகாத பிள்ளைகள்:-
   (2) தொழில் பார்ப்போர் (அரசாங்கம், தனியார்);-
   (3) படிக்கும் பிள்ளைகள்:-
   (4) பிள்ளைகளைப்பற்றியவேறுவிபரங்கள் இருப்பின் விபரமாகக், குறிப்பிடுக,
4. மூகவரி:-
5. குடும்பத்தலைவரின் முழுப்பெயர்:-
   சம்பவம் நடந்த இடம்,திகதி:-
   கணவன் இறக்குமுன்னம் உள்ளதொழில்;-
   வேறு விபரங்கள் இருப்பின் விபரமாகக் குறிப்பிடுக:-
6. சிராமசேவையாளரின் சிபாரிசு,-
7. விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

திட்ட இணைப்பாளர்
றெட்பானு,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

K பொன்னம்பலம்
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு. (1711)



## முதலாவது ஆண்டு ★ நினைவஞ்சலி ★



அமரர் கனகராசா கதிரமலை
(வட பிராந்திய சர்வோதய வெளிக்கள இயக்குநர்)


தோற்றம்:- 05 08.1953 மறைவு:- 26.09 1986

காற்றே நீ மறந்தாயோ
கதிரமலை செய்த சேவைகளை—இல்லை இல்லை
நேற்றே நீ துடி துடித்திருப்பாய் — எம்
நேர்மையாண அண்ணன்
வேட்டால் பலியாகி
விண்ணுலகு அடைந்து நாளை
பூர்த்தியாம் ஓராண்டு என
பொங்கி எழுந்திருப்பாய்
ஆற்றுமல் துடிக்காதே - அவன்
ஆற்றி விட்ட சேவைகளை
காற்றே நீ தானே
கனிவோடு காவியது.

வடபகுதி சர்வோதய ஊழியர்கள்



அமரர்
**எஸ், கே. திரவியநாயகம்**
ஜே. பி. யூ. எம்.
(முன்னைநாள் சாவகச்சேரி நகரசபைத் தலைவர்)
அவர்களின்



31ஆவது
## நினைவாஞ்சலி

விருத்தம்

தங்கத் தவக்கொழுந்தே!
தயவான திரவியமே!
எங்கள் துயர்துடைத்த
எழிலரசே! தங்களது
பொங்குமெழில் பேச்சழகும்
மேலான பண்பழகும்
இங்கிதமாய்க் கலங்கி!
இன்னருளால் துலங்கி
எங்குமெழில் பொங்க
நாட்டிவைத்த சாதனையும்
பங்கமறப் பரிமளிக்கப்
போற்றிவைத்த போதனையும்
அங்கேநீர் அமலன் திருவடியில்
அமைதியுடன் சாந்திபெற
இங்கிருந்து இறையருளை
இறைஞ்சுகின்றோம் நாம்.

★ ★ ★

பல்லரிய பண்பாடி வல்லபரன் நல்லருளைப்
பற்றிப் பிடித்தங்கே! பாதமலர்
சென்றடைந்த,
நல்லவரே! நல்லொளியே!
ஞானத்திரவியமே!
நல்லடியார் கூட்டமதில்
நாளும் நிறைந்திருக்க
சொல்லரிய நல்லறத்தில்
சோர்வின்றி நீர்புரிந்த
சொல்லொணுச் சேவை
சுற்றித் துதிபாடநீர்
வல்ல குருநாதன் வலப்பக்கம் வீற்றிருக்க
செல்வமகள் மக்களெல்லாம்
மா!பரனை வேண்டுகின்றோம்.

அன்பு மகள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர்.


★ வியாபாரம் பெருக ★ விளம்பரம் செய்க

NATIONAL LIBRARY
NLSL OF SRI LANKA
15/09/2023
11:13:31



தமிழர் அபிலாஷைகளைப் பெற்றெடுக்க

# பிரிந்து நிற்காதீர்கள்!

# இணைந்து நில்லுங்கள்!!

மொழியால், பண்பாட்டால், குறிக்கோளால், ஒரே இலக்கை அடைவதற்கு, தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட இயக்கங்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டியது இந்தக் காலகட்டத்தில் மிக அவசியமாகும்.

மொழியும் இனமும் அபிவிருத்தி காண வழி காட்ட வேண்டும்.

எங்கள் மொழிக்காக, இனத்திற்காகப் பாடுபட்ட தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் சோல்பரி ஆணையாளரிடம் தான் கேட்ட 'ஐம்பதுக்கு ஐம்பதைப்' பெற முடியாததற்கு முக்கிய காரணம் தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமையீனமே என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இன்று எமது மத்தியில் இருக்கும் இந்திய சமாதானப் படையுடன் இணைந்து செயற்பட்டு சாதுரியமாக நடந்து எமது இலக்கை அடைய வேண்டும்.

அவர்களின் திசையைத் திருப்பாமலேயே விடுதலைப் புலிகளும், விடுதலைக்கூட்டணியும், ஏனைய இயக்கங்களும் அவர்களுடன் இணைந்து திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களில் தமிழ் மக்களை மீண்டும் துரிதமாகக் குடியேற்ற முயற்சிக்க வேண்டும்.

மிகவும் இராஜதந்திரத்துடன் நடந்தால் தான் நாம் எமது இலக்கை அடைவோம்.

எமது ஒற்றுமையின்மையானது மாற்றானின் கையை ஓங்குவித்து இந்தியாவின் வெறுப்பையும் பெற வழி வகுக்கும். இந்திய உபகண்டம் என்றென்றும் எமக்கு உபசரணையாக இருந்தால்தான் நாம் எமது நிலையை ஸ்திரமாக்க முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது.

கடந்த காலப் பகைகளை மறவுங்கள். வருங் காலச் சந்ததி வாழ வழி சமையுங்கள். மக்களின் வாக்கை ஒற்றுமையுடன் ஒரு குரலுடன் கேளுங்கள். உங்கள் அனைவருக்கும் தமிழ் மக்கள் கட

★ க இரத்தினவேல் ★

மைப்பட்டு இருக்கிறார்கள். நீங்கள் அனைவரும் எமது இடரைக் களைய சிங்கள ஆதிபத்தியத்தின் நயவஞ்சக நடவடிக்கைகளுக்கு எதிராக மிகவும் சாதுரியமாகச் செயல்பட வேண்டும்.

இப்பொழுது மிகவும் சாதுரியமாக இந்தியாவைச் சிங்கள மக்கள் தம் பக்கம் திருப்பப் பார்க்கிறார்கள். அப்படி நடந்தால் எமது நிலை ஆபத்தில் முடியும். நாங்கள் அனைவரும் ஒரே குரலுடன் இந்திய அனுசரணையையும் பெற்று செயற்பட்டால் நிச்சயம் எமது இலட்சியத்தை அடைய வழி பிறக்கும்.

அல்லலுறும் தமிழ் மக்களை நிம்மதியாக அபிவிருத்தி காண தீர்க்கதரிசனத்துடன் வழி நடத்துவதே தலைவர்களின் கடமை.

எங்களின் ஒற்றுமையான குரல் பாரதத்தின் மதிப்பை எங்களுக்குப் பெற்றுத்தரும். எமது ஐக்கியத்தைப் பிரிக்கும் சில சக்திகளுக்கு இடம் கொடுத்து, பிரிந்துநின்று எமது உரிமைகளைப் பறிகொடுக்கக் கூடாது.

பாரதத்தினால் உண்டாக்கப்பட்ட ஒப்பந்த ஐ நா. ஸ்தாபனம், பொதுநல நாடுகளின் ஸ்தாபனம், ரஷ்யா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற வல்லரசுகளின் ஆசியைப் பெற்றபடியால், உலக நாடுகளால் அனுசரிக்கப்பட்ட ஒப்பந்தம் ஆகிறது.

ஆகவே, இந்தியாவின் செயல்பாட்டைத்துரிதப் படுத்தி, ஒப்பந்தத்தை நிறைவேற்றி, பொறுப்புக்களை ஏற்று பரிபாலனத்தைத் தொடங்கி, மாநிலத்துக்குரிய சகல அதிகாரங்களையும் கைப்பற்றி, நாம் தமிழ் மக்களை அமைதிக்கும் அபிவிருத்திக்கும் வழிகாட்ட வேண்டும். அல்லல்கள் சகலதும் அகற்றப்பட வேண்டும்.

சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தாலும் வீடு வந்து சேராது என்ற பழமொழியை மாற்றி எல்லாப் பிள்ளைகளும் ஒற்றுமைப்பட்டு விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் ஆலோசித்து அதிகாரங்களை, உத்தியோகங்களை, பொறுப்புக்களைச் சுமக்க முன் வர வேண்டும். ★

# திருவருள் தந்திடும் திருமகள்

நவராத்திரி நாட்களில் நடு மூன்று நாளும் செல்வத்துக்கு அதிதேவதையான லக்ஷ்மிதேவியை செல்வம் வேண்டி வழிபாடியற்றப்படுகிறது. 'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்' என்பார்கள். பணமேதான் உலகின் ஜீவநாடியாக விளங்குகிறது எனினும் பொருந்தும்,

'செல்லாது அவன் வாயிற் சொல்' என்கின்றார் ஒளவையார். பணம் இல்லாதவன் என்ன கூறினாலும் அது சபையில் ஏறாது. மனித வாழ்க்கைக்கு பணம் இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது.

ஆசையினால் தான் நவராத்திரியின் மூன்று பெருஞ் சக்திகளில் செல்வ லக்ஷ்மியை நடுவிலே வைத்து வழிபட்டனர் நம் முன்னோர்.

உருவும் நலனும் ஒளியும் சிறந்து அழகாக விளங்கும் ஒன்றைத் திரு என்பர். திரு என்றால் சிறப்பு, செல்வம் என்பது பொருள். ஒருவரின் பெயருக்கு முன்னே திரு என்று எழுதுவதும் சிறப்



பின் பொருட்டே. எல்லோராலும் விரும்பப்படுவது அழகு. திருமகளாகிய லக்ஷ்மி தேவி அழகே உருவானவள்.

அவள் அழகு லட்சுமியாவாள், ஆதி லட்சுமி, கஜலட்சுமி, தனலட்சுமி, தாலிய லட்சுமி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, சந்தான லட்சுமி, சௌபாக்கிய லட்சுமி என்னும் அஷ்ட லட்சுமிகளாய் விளங்குகின்றாள்.

ஒருவனின் முகத்திலோ வாழ்விலோ வீட்டிலோ வளத்திலோ அழகு இல்லாவிட்டால் அவனை இலட்சுமி கடாட்சம் இல்லாதவன், லட்சுமீகரம் இல்லாதவன் என்று பெரியோர் கூறுவர்.

மகாலக்ஷ்மியை இம்மை மறுமைச் செல்வங்களை அருளுகின்ற உலக அன்னை என்றும் எல்லாவித மங்களங்களுக்கும் உறைவிடம்

நிதர்ஸன்

என்றும் வேண்டுவனவெல்லாம் தரும் காமதேனு என்றும் கூறுவதுண்டு.

திருமால் காத்தல் தொழிலைச் செய்வதற்கும் லட்சுமியின் கடைக்கண் அருளே வேண்டும்.

''கடைக்கண் அருள் படைத்தன்றோ
கண்ணன் உலகெல்லாம் காவல் பூண்டான்''

என்பது பாடல்.

செந்தாமரையில் வீற்றிருக்கும் செல்வலக்ஷ்மியானவள் நவராத்திரியில் விரதமிருந்து தன்னை வழிபடும் அன்பர்களுக்கு வேண்டும் வரம் ஈவாள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

அம்பிகையின் அருளின்றேல் எமக்கு இம்மையில் மட்டுமன்றி மறுமையிலும் உய்வில்லை. சிவத்தை அடையச் செய்பவள் சக்தி. அதேபோல் செல்வம் எனப்படும் ஐஸ்வரியத்தை எமக்கு ஈந்தருள்பவள் திருமகள். அவள் திருவருள் தந்திடும் திருமகள்.

ஆகவே, இந்த நவராத்திரி விரதத்தை நாம் கைக்கொண்டு பராசக்தியாம் மகாலக்ஷ்மியின் திவ்விய திருவருளைப் பெற்று செல்வர்களாக வாழ வழி தேடுவோமாக.

# யாழ் மாவட்ட செயலகமும் பாஸ்போர்ட் படிவங்களும்

யாழ் கச்சேரிக்கு வந்து கொண்டிருக்கின்ற பெருந் தொகையான (பாஸ்போர்ட்) கடவுச்சீட்டு விண்ணப்பப்பத்திரங்கள் வந்தவுடனேயே விநியோகிக்கப் பட்டதுபோல, செய்திகளின்படி உணர முடிகின்றது.

கச்சேரிக்கு வந்து சேர்ந்த விண்ணப்பங்களை உடனடியாக விநியோகித்து முடித்ததன் மூலம் செயற்கையான தட்டுப்பாடு ஏற்பட வழி செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் உருவாகியிருக்கிறது.

விநியோகம் என்று வந்ததை எப்படியும் கொடுத்து முடித்து விட்டால் போதும் என்ற மனப்பான்மை வரவேற்கத்தக்கதல்ல.

இது பொது நலன் சார்ந்த சேவை என்ற நோக்குடன் அணுகப்பட வேண்டிய விடயம்.

இதே படிவங்கள் கச்சேரிக்கு வெளியாலே, வாசல் முகப்பிலே படிவம் ஒன்று 5 ரூபா முதல் 15 ரூபா வரை விற்கப்படுகின்றன.

கச்சேரிக்கு வருகின்ற படிவங்களைத் தேவைப்படுவோருக்கு சரியாகப் பகிர்ந்தளிக்க தகுந்த முறையை ஒழுங்குசெய்வது அதிகாரிகள் கடமை.

கடவுச்சிட்டு விண்ணப்பங்களை வழங்கும்போது, இருபக்கமும் ''காபன்''

குறையும் நிறைவும்

உள்ள கடதாசி உபயோகித்து காசு அறவிட்டு, அதன்பின் விண்ணப்பதாரியின் பெயர், விலாசம போன்றவற்றை எழுதியபின்பு அவற்றை வழங்கலாம். இதன் மூலம் கறுப்புச்சந்தையில் படிவங்களின் விற்பனையை ஓரளவு தவிர்க்கலாம், இதனால் செயலகத்துக்கு வந்து கறுப்புச் சந்தைக்குப் போகாது.

விண்ணப்பப்பத்திரங்களுக்குத் தட்டுப்பாடு வரும் என்று எண்ணி முன்கூட்டியே விண்ணப்பப்படிவங்களை, வாங்கிச் சேர்த்து வைக்கவேண்டிய எண்ணம் எழஇடம் அளிக்காது எப்பவும் கச்சேரியில் எடுக்கலாம் என்ற எண்ணம் உருவாக்கப்பட வேண்டும்.

### மற்றும் சில பிரச்சினைகள்

கச்சேரியின் உள் முகப்பு மண்டபத்தில் விசாரணைப்பகுதி முன்பாக ''ஆலோசனைப் பெட்டி'' வைக்க ஆவன செய்ய வேண்டும்.

இந்தப் பெட்டிக்குள் போடப்படும் ஆலோசனைகளை அரச அதிபர் ஆராய்ந்து - ஆக்கபூர்வமான — நடைமுறைக்கு ஒத்த - நடவடிக்கைகள், தீர்மானங்கள் எடுக்க வழி, சந்தர்ப்பம் உண்டு. நல்ல ஆலோசனைகளை வழங்குபவர்கட்கு அரச அதிபர் நன்றிக்கடிதம் அனுப்பி பொதுமக்களை ஊக்குவித்து அவர்களின் ஒத்துழைப்பை, நல்லுற

யாழ்வாசி

வைப் பெறமுடியும்.

யாழ். கச்சேரியில் கடமை சம்பந்தமாக வரும் பெண்களின் நன்மை கருதி அவர்களுக்கு என்று தனியாக ஒரு மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். மலசல கூடத்தில் சிறுபேணிகள், வாளிகள் இல்லை. சில மலகூட அறைகள் பழுதடைந்து இருந்தால், அவை பூட்டப்பட்டு வைக்கப்படல் வேண்டும் உள்ளே நின்று

(5 ஆம் பக்கம் பார்க்க)

பொய்யாமொழி



குறள்:

அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய் கண் டன்னது உடைத்து.

பொருள்:

எளிதில் காணமுடியாத அருமையும் இனிமையற்ற முகமும் உடையவனது பெரிய செல்வம், பேய் கண்டு காத்திருப்பதைப் போன்றதன்மையுடையது.

# சோர்ந்து போகாதீர்!

''சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும்'' [லூக் 18:1]

சுவிசேஷக் கூட்டங்கள், கன்வென்ஷன் கூட்டங்களில் சரீர சுகத்திற்காகவும், நோய்கள் நீங்குவதற்காகவும் ஜெபித்துக்கொள்ள முன் வருபவர்கள்தான் முன்னெல்லாம் அதிசமான பேராயிருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ, ''ஐயா சர்த்தர் எங்களுக்கு ஜெப ஆவியைத் தரும்படி ஜெபியுங்கள்'' என்று கேட்கிறவர்கள் அதிகமாகி விட்டார்கள். இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் ஜெப் விழிப்புணர்ச்சிக்காகக் கர்த்தரைத் துதிக்கிறேன்.

ஜெபிக்கப்போகிறேன்' ஜெபிக்கப்போகிறேன்

ஞானக்கதிர்

என்று உங்களுக்குள்ளே உள்ளுணர்வை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். காணுமிடங்களிலெல்லாம் ஜெபிக்கவேண்டும் என்ற வாசகத்தை எழுதிவையுங்கள். கடதாசியிலே அதை எழுதி சமையல்செய்யும் அறை,

(5 ஆம் பக்கம் பார்க்க)

வாசகர் திருமுகம்

## கிழக்கைப் பிரிக்கும் தேவாவின் முயற்சி

கிழக்கு மாகாணத்திற்குத் தற்காலிக மாகாண சபை தேவை இல்லை என அமைச்சர் திரு. தேவநாயகம் கூறுகின்றார். கிழக்கிற்கு 10 எம். பிக்கள் இருப்பதாகவும், அங்கு சிவில் நிர்வாகம் தொடர்ந்து சீராக நடைபெற்று வருவதுமே காரணம் எனவும் விளக்கம் அளிக்கப்பட்டது.

அவரின் கூற்று முற்று முழுப் பூசனிக்காயைச் சோற்றில் புதைப்பது போலாகும்.

கிழக்கில் சிவில் நிர்வாகம் சீராக நடைபெறுகின்றதாயின் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டங்களை ஏன் மட்டக்களப்பில் நடத்தாது கொழும்பில் அவர்கள் நடாத்தினர்...? மட்டக்களப்பு எம். பி. ஜனாப் உதுமா லெப்பையே சில சந்தர்ப்பங்களில் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டங்களைக் கொழும்பில் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

பத்து எம். பிக்கள் இருப்பதனால் தற்காலிக மாகாண சபை தேவை இல்லையெனில், மற்றைய மாகாணங்களில் உள்ள எம். பி.க்களும், நாங்கள் இருக்கும்பொழுது மாகாண சபைத் தேர்தல் தேவை இல்லையெனக் கூறலாம். அப்படிக் கூறினால் அங்கு மாகாண சபைகளை அமைக்காமல் விட்டு விடுவார்களா?

கிழக்கு மாகாண எம். பி எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் திரு. தேவநாயகம், சமாதான உடன்படிக்கை உருவாகுவதற்கு முன்பு தமது தொகுதிக்குச் செல்லமுடியவில்லை. அப்படியான நிலையில் அவரை மக்கள் பிரதிநிதி எனக் கூறமுடியுமா?

மொழியாலும், கலாசாரத்தாலும் ஒன்றுபட்ட வடக்கு, கிழக்கு மக்களைப் பிரித்தாளும் தந்திரத்தின் வெளிப்பாடே திரு தேவநாயகத்தின் கூற்று என்பதைத் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

திருமலை. து. திருஞானசம்பந்தர்.

பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★

பின்வரும் தொழில் வாய்ப்புகள் எம்மிடம் உண்டு.

★ (1) கோழிப் பண்ணைத் தொழிலாளர். ★

சாப்பாடு இருப்பிட வசதியுடன் சம்பளம் 500 S.R
மேலதிக வேலைகளுக்கு (OVER TIME) சம்பளம் வழங்கப்படும்.

★ (2) Workers maintenance Cleaners
சம்பளம் 400 SR

★ ஈராக்
செல்வதற்கு (Medical & agreement) செய்து முடித்தவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

T. இந்திரநாதன்
M. THREE TRAVELS

''சற்குணவாசா'' 96, கச்சேரி நல்லூர் வீதி,
கல்லூரி வீதி - சோதிலேன், நல்லூர் - யாழ்ப்பாணம்.
காங்கேசன்துறை. (முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)
(BUS வழி இல. 769)

★ PETTAH ESSENCE SUPPLIERS ★

பலவித பலரக எசன்ஸ் வகைகள் பொலீத்தீன்
இனிப்புத் தொழிற்சாலைக்குத் தேவையான
உற்பத்திப் பொருள்கள் மற்றும்ஐஸ்கிறீம் குளிர்பானத்திற்கு
தேவையான மூலப்பொருட்கள் இலங்கை கடதாசி
கூட்டுத்தாபன கடதாசி வகைகளுக்கும் மற்றும்
அத்தியாவசிய தேவைப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்

★ பெற்று எசன்ஸ்
சப்பிளேயர்ஸ்

இல. 223, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

30 வருட அனுபவமிக்க தரமிக்க
உள்ளூர் ஓடுகளை விற்பனை செய்வதில்
பிரசித்திபெற்ற வியாபாரிகள்

M. T. Somasundaram & Sons

★ வீனஸ் ★ மான்
★ தேனீ ★ செவன
★ முயல் ★ நாருணி

போன்ற ஓடு வகைகளைக் கொள்வனவு செய்ய
நீங்கள் நாடவேண்டிய இடம்

M. T. சோமசுந்தரம் & சன்ஸ்
199 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

NATIONAL LIBRARY
NLSL OF SRI LANKA
15/09/2023
11:13:31



# குருநகர்ப் பகுதியில் இந்தியப் படை முகாம் நிறுவப்பட மாட்டாது!

## சமாதானப்படை அதிகாரி தகவல்

குருநகர், செப். 27

இந்திய அமைதிப் படையின் இராணுவ முகாம் குருநகரில் அமைக்கப்படமாட்டாது இந்திய அமைதிப்படையின் பொதுநல சேவை மேலதிக அதிகாரி திரு. ஹெல்ஷார் இதனைத் தெரிவித்தார்.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி குருநகரில் இந்திய அமைதிப் படையின் இராணுவ முகாம் நிறுவப்படுவதை ஆட்சேபித்து மகஜர் ஒன்றை யாழ் கோட்டை முகாம் பொறுப்பதிகாரியிடம் கையளித்து இருந்தது.

மகஜருக்கு பதிலளித்து ஐக்கிய முன்னணிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்திய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குருநகரில் இந்திய சமாதானப்படையின் முகாமை அமைக்க முன்னர் திட்டமிடப்பட்டு இருந்தது.

பின்னர் அத்திட்டம் கைவிடப்பட்டு விட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-51)

### பயிலுனர் தினம்

மானிப்பாய், செப். 27

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் பயிலுனர் தினம் ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி நடைபெற உள்ளது.

பயிலுனர் தினத்தையொட்டி கண்காட்சிகள் கலைநிகழ்ச்சிகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. (உ-90)

### ஊர்காவலர் சுட்டுக் கொலை!

கொழும்பு, செப் 27

தங்காலையில் சூரிய வேவ என்னுமிடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவல்படை வீரர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதலில் 300 பேர் வரை கைது செய்யப்பட்டனர். (உ-எ)

## அதிகாரி தாக்கப்பட்டார்

# காணிப் பதிவகத்தில் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

## பருத்தித்துறையில் சம்பவம்

பருத்தித்துறை, செப்.27

பருத்தித்துறைகாணிப் பதிவகம் கடந்த சில நாட்களாக ஊழியர்களினால் பகிஷ்கரிக்கப்பட்டு வருகிறது.

இது பற்றித் தெரிய வருவதாவது:-

"பருத்தித்துறை காணிப் பதிவக உயர்அதிகாரி ஒருவர் வெளியார் ஒருவரினால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அலுவலகவேலைகள்ஸ்தம்பிதமடைந்திருக்கின்றன.

கடந்த 14 ஆம் திகதி பருத்தித்துறையைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி ஒருவரின் விகிதர் கடமை நேரத்தில் காரியாலயத்தினுள் புகுந்து உயர் அதிகாரி ஒருவருடன் வாக்குவாதப்பட்டார். பின்புஉயர் அதிகாரி தாக்கப்பட்டார்.

இது தொடர்பாக புலோலி பொலீஸ் நிலையத்தில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி புகார் செய்ததுடன் கொழும்பு காணிப்பதிவகத்தின் பிரதம பதிவாளருக்கும் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பூரண விசாரணை மேற்கொண்டுதாக்கியவருக்கு கடும் தண்டனை வழங்கும் வரை ஊழியர்கள் பகிஷ்கரிப்புச் செய்யப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

இங்கு இரு தினங்கள் மட்டுமேபொதுமக்களின் மறியல் போராட்டம் நடைபெற்றது.

தற்போது ஊழியர்களே வெளியில் கூடி நின்றுவிட்டுச் செல்கின்றார்கள்.

பிறப்பு, இறப்புச்சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்தவர்கள் அலுவலகம் இயங்காததால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். (உ-118)

### பெரும் தீ விபத்து தடுக்கப்பட்டது

சுன்னாகம், செப் 27

சுன்னாகம் சந்தியில் நிகழ்ந்த பெரும் தீ விபத்து பொதுமக்களினதும் இளைஞர்களினதும் புத்திசாதுரியமான நடவடிக்கைகளால் பரவாது தடுக்கப்பட்டது.

புதனிரவு மின்சாரம் திடீரென தடைப்பட்ட வேளையில் மெழுகு திரியுடன் பெற்றோல்வாங்க முயன்றபோது தீமூண்டதாகவும் இதனால் சந்தியில் உள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றில் தீ பற்றிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

ஸ்தலத்துக்கு விரைந்து வந்த இளைஞர்கள் உடனடியாக மணல்மூடைகளைக் கொண்டு வந்து மணல் எறிந்து தீயைப் பரவவிடாது தடுத்தனர். இளைஞர்களின் செயலை பொதுமக்களும் வர்த்தகர்களும் பெரிதும் பாராட்டினர். [ஒ-27]

# தமிழர் ஆசிரியர் சங்கம் இந்திய அரசுக்குவேண்டுகோள்

குருநகர், செப். 27

வீரவேங்கை இ. திலீபனின் உண்ணாவிரதத்தை முடிவுக்குக் கொண்டுவர வழி சமைக்குமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இந்திய அரசுக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம்விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளதாவது:-

ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு சாத்வீக முறையிலான போராட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று இலங்கை-இந்திய அரசுகள் முன்பு கருத்துத் தெரிவித்து வந்தன.

அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை முற்றாக ஒப்படைத்த பின்னர் அகிம்சைரீதியான சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இது தொடர்பாக பாராமுகமாக இருப்பது கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ-51)

# இந்திய அரசை இனம் காண்போம்

ஊர்காவற்றுறை, செப். 27

முதலாளித்துவ சார்புடைய இலங்கை அரசின் நலன்களைப் பேணும் வகையில் நடந்துகொள்ளும் இந்திய அரசுபற்றி ஈழத்தமிழ் மக்கள் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். நாடாளுமன்ற ஜனநாயகம் என்று கூறிக் கொண்டு அங்கும் ஓர் ஆட்சிமொழியை பிரகடனப்படுத்திகொண்டுள்ள இந்திய அரசு இலங்கையிலும் தமிழுக்கு முக்கியத்துவம் கிடைப்பதில் அக்கறை காட்டும் என எதிர்பார்க்க முடியாது.

சுருவில் சனசமூக நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்படி சனசமூக நிலையம் சார்பில் அதன் உபதலைவர் திரு .சு. சிவசம்பு அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

தற்போது உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் திலீபனின் தியாகத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அறிக்கை அமைந்துள்ளது. (இ-16)



கடந்த புதன்கிழமையன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை பலாலிக்கு அழைத்துச் செல்ல தென்னிந்திய இராணுவத் தளபதி திபெந்தர்சிங் புலிகள் முகாமுக்கு வந்தபோது எடுக்கப்பட்ட படம். திரு. பிரபாகரனையும் திபெந்தர்சிங்கையும் சூழ புலிகள் உறுப்பினர்கள் காணப்படுகின்றனர். (படம்: ஜெயப்) (ஒ)

## கிளிநொச்சி மாவட்டத்தில்

# பொருள்களுக்கு தட்டுப்பாடு இல்லை அவற்றைவிநியோகிப்பது ப.நோ.கூ. சங்கங்களின் கடமை

## உதவி ஆணையாளர் கூறுகிறார்

கிளிநொச்சி, செப். 27

கிளிநொச்சி மாவட்டதில் சீனி, மா, அரிசி, எரிபொருள் என்பனவற்றுக்குத் தட்டுப்பாடு இல்லை. மாங்குளம், வவுனியா, யாழ்ப்பாணம், உணவுத் திணைக்களக் களஞ்சியங்களிலும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திலும் மேற்படி பொருள்கள் கையிருப்பில் உள்ளன. இவற்றை மக்களின் தேவைக்காக எடுத்து விநியோகிப்பது பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் கடமையாகும்.

இவ்வாறு கிளிநொச்சிக் கச்சேரியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) திரு. சி த. மார்க்சண்டு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிராமசேவகர் பிரிவுகள்தோறும் பாவனையாளர் சங்கங்களை அமைக்கவும், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்தோறும் வர்த்தக சங்கங்களை அமைக்கவும் அமைச்சு நடவடிக்கைமேற்கொண்டுள்ளது.

இதுசம்பந்தமாகப் பாவனையாளர்களும், வியாபாரிகளும் கரிசனை எடுக்கவேண்டும். அப்போதுதான் பாவனையாளர்களுக்குள்ள பிரச்சினைகளைப் பாவனையாளர் சங்கங்கள் ஊடாகவும் வியாபாரிகளுக்குள்ள பிரச்சினைகளை வர்த்தகர் சங்கங்களுக் கூடாகவும் தீர்த்துவைக்கமுடியும்.

பொருள்களின் விலை சம்பந்தமாகப் பொதுமக்கள்எம்முடன் ஒத்துழைக்கும் பட்சத்தில்தான் நாமும் எமது சேவையை நிறைவாகச் செய்யமுடியும். விலைகளைக் கூட்டி விற்பனை செய்பவர்களையும், நிறைவுகளிலும், அளவுகளிலும் மோசடி செய்வோரையும் கண்டு பிடித்துத் தக்க தண்டனை வழங்க முடியும் — என்றார். (ஒ-76)

# மண் வளம் பேண மரங்களை நடுங்கள்

## உதவி அரச அதிபர் கோரிக்கை

அராலி, செப். 27

மரங்கள் அழிக்கப்படுவதால் எமது நாடு கடும் வரட்சியை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே எமது அடுத்த சந்ததிக்கு நாம் செய்யக்கூடிய கைமாறு பெருமளவில் மரங்களை நட்டு வளர்த்து எமது மண்ணைப் பாலைவனமாக மாறவிடாது வளம் கொழிக்கும் பூமியாக தொடர்ந்து இருக்க வழி செய்வதே ஆகும்.

-இவ்வாறு அராலி மேற்கு மாதர் முன்னேற்றச்சங்க வருடாந்த பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் கூறினார்.

தொல்புரம் விவசாய போதனாசிரியர் க. சந்திரசேகரம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பொ. சிவானந்தம் மற்றும் பலரும் உரையாற்றினர். (உ-12)

# வாக்காளர் பட்டியல் சீரமைக்கப்படுகிறது

மானிப்பாய், செப். 27

1987ஆம் ஆண்டுக்கான தேர்தல் வாக்காளர் பட்டியல் திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வாக்காளராக புதிதாகச் சேர்பவர்களைச் சேர்த்துக் கொள்வதும் இறந்தவர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்குவதுமே தற்போதைய செயற்பாட்டின் நோக்கமாகும்.

இப்படி யாழ்ப்பாணம் உதவித் தேர்தல்அதிகாரி திரு. எஸ். எஸ். தர்மபாலன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுவரை தமது பெயரினை பதிவு செய்யாதவர்கள் உடனடியாக தத்தமது கிராமசேவையாளருடன் அல்லது தேர்தல் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறும் திரு. தர்மபாலன் உதயன் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-90)

### மாணவர்களின் முன்மாதிரி

யாழ்ப்பாணம், செப். 27

புங்குடுதீவு மேற்கு அ. மி. தமிழ் வித்தியாலய மாணவர்கள், அராலிப் பாதை வேலைக்கு 115 சாக்குகளைக் கொடுத்து உதவியுள்ளனர்.

இச்சாக்குகளை மாணவர்கள் வீடுவீடாகச் சென்று சேகரித்துக் கொடுத்துள்ளனர்.

இவர்களின் முன்மாதிரியைப் பாதை அமைப்புக் குழு பாராட்டியுள்ளது. (ஒ)

# தென்னிலங்கையில் தேடி அழிக்கும் வேலை

கொழும்பு, செப். 27

தென் இலங்கையில் தடைசெய்யப்பட்ட ஜே. வி. பி. இயக்கத்தினரின் ஆயுதத் தொழிற்சாலைகளைக் கண்டு பிடிப்பதிலும், அழிப்பதிலும் பொலீஸ் கொமாண்டோப்படைகளை பாதுகாப்பு அமைச்சு முழு அளவில் ஈடுபடுத்தி வருகின்றது.

'தேடி அழிக்கும்வேலை, தென் இலங்கையில் கோணதெனியா, வெரலகெட்டிய, அங்குல்மடுவ, இஹல, பஹல,பெலிகங் பகுதிகளில் மேற் கொள்ளப்பட்டு வருவதாக தக்காலை பொலீஸ் அதிபர் விக்டர்பெரேரா தெரிவித்தார். (உ.எ)

# சபையின் பாதுகாப்பு எம். பி. க்களுடையதே

## நான் பொறுப்பல்ல என்கிறார் ஜே. ஆர்.

கொழும்பு, செப். 27

நாடாளுமன்றக் கட்டடத்தினுள் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு என்னுடையதல்ல; சபாநாயகரும் எம். பிக்களுமே அதற்கு பொறுப்பு

இப்படி ஜனாதிபதி ஜயவர்த்தன சொன்னார் வியாழனன்று அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் ஜனாதிபதி இப்படிச் சொன்னார்.

நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு வழங்கப்படுவது குறித்தும் நாடாளுமன்ற ஊழியர்களைத் தெரிவு செய்வது குறித்தும் மேற்படி கூட்டத்தில் பல எம்பிக்கள் கேள்விகள் எழுப்பினர்.

பதிலளிக்கையில் ஜனாதிபதி மேலும் சொன்னதாவது;

நான் ஒரு எம்.பி அல்லன் நாடாளுமன்றக் கட்டடத்தினுள் என்னால் பாதுகாப்பு வழங்கப்பட முடியாது. நாடாளுமன்றக் கூட்டத்துக்கு வெளியேதான் நான் பாதுகாப்புக்குப் பொறுப்பாக உள்ளேன்.

நாடாளுமன்ற அலுவல்களில் நான் தலையிட முடியாது.

சம்பிரதாயக் கூட்டத்தை ஆரம்பித்து வைக்க மட்டுமே நான் நாடாளுமன்றம் செல்ல உரிமை உண்டு.

இனிமேல் அரச நாடாளுமன்றக் கூட்டத்துக்குத் தலைமை வகிக்கவும் நான் நாடாளுமன்றம் வரமாட்டேன்.

இப்படி ஜனாதிபதி சொன்னார். (உ-எ)

### உரப்பசளை விற்பனை

வட்டுக்கோட்டை, செப். 27

தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் யூரியா மற்றும் உரப்பசளைகள் போதியளவு விற்பனை செய்யப்படுகின்றன

இங்குள்ள உரக் களஞ்சியத்திலிருந்து விற்பனை செய்யப்படும் உரப்பசளைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மேற்படி கமநலசேவை நிலையத்தினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். (ஒ-161)

### பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 27

இந்திய சமாதானப் படையினரின் துப்பாக்கிப்பிரயோகத்தின் போது மரணமான யோகனின் பூதவுடல் மன்னார் பட்டினசபை அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

சுமார் 3 000க்கும் அதிகமான மக்கள் அஞ்சலி செலுத்தினர். (ஒ)

## மக்கள் முகம்

### யாழ் முஸ்லிம் கல்விக் கழகம்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ் முஸ்லிம் சமூகத்தில் கல்வியில் மறுமலர்ச்சியை உருவாக்கும் பொருட்டு 'யாழ் முஸ்லிம் கல்விக் கழகம்'' எனும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கழகத்தின் உத்தியோகத்தர்களாக பின்வருவோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆயுட் கால போஷகர் - கல்விப்பணிப்பாளர். ஜனாப். எம். எம். மன்சூர்.

தலைவர் - வட்டாரக் கல்வி உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம், கிளிநொச்சி ஜனாப். எஸ். ஏ. சி. இனுனு.

உபதலைவர்கள் - சட்டத்தரணி ஜனாப். எம். எம் மன்சூர், அதிபர், யாழ் மீரானியாக்கல்லூரிமௌலவி ஒ. எல். எம் அப்துல்றஸாக்

செயலாளர் - ஜனாப். என். என். தாஜ்.

உபசெயலாளர் - ஜனாப் எம். எம். ஏ. றஹீம்.

பொருளாளர் - ஜனாப் எம். ஏ. கலீல்.

உபபொருளாளர் - ஜனாப் ஏ. பாருக்.

செயற்குழு உறுப்பினர்கள் :- ஜனாப் எம். எம். அமாதுல்லா, ஜனாப் எம். எஸ். எம். முஃதார். அல்ஹாஜ் எம். எல் எம். ஏ. காதர். ஜனாப். ரி. நெப்போலியன். (உ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## படையினரின் $2\frac{1}{2}$ வருட கெடுபிடிகளால்

# அம்பாறை பகுதி மக்கள் பிச்சைக்காரராகி விட்டனர்

## பிரசைகள் குழுத் தலைவர் கூறுகிறார்

கல்முனை, செப். 27

கடந்த இரண்டரை வருடங்களுக்குள் அம்பாறை மாவட்டத்தில் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் ஸ்ரீலங்கா ஆயுதப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் உடைமைகளையும் ஆயுதப்படையினர் அபகரித்துள்ளனர். இதனால் அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் மக்கள் பிச்சைக்காரர்களாகி விட்டனர். இந்தக் கொடுமைகளையெல்லாம் அம்பாறை மாவட்ட சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான உயரதிகாரிகள் எதுவித அக்கறையும் கொள்ளாமல் சும்மா பார்த்துக்கொண்டிருந்தனர். இது ஓர் இராஜத்துரோகமாகும்.

அக்கரைப்பற்று பிரசைகள் குழுத் தலைவர் ஜனாப் ஏ. எம். அகமது லெப்பை இவ்வாறு சொன்னார்.

- அகில இலங்கை பிரசைகள்குழுவின் பொதுச் செயலாளர் வண. பிதா திஸ்ஸ பாலசூரிய தமது குழுவினருடன் அக்கரைப்பற்றுக்கு விஜயம் செய்து அக்கரைப்பற்று பிரசைகள் குழுவினருடன் கலந்துரையாடினார். அப்போதே ஜனாப் ஏ. எம். அகமது லெப்பை அவர்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

வண பிதா திஸ்ஸ பாலசூரிய கலந்துரையாடலின்போது தெரிவித்ததாவது!-

வடக்கு, கிழக்கில் உள்ள சகல பிரசைகள் குழுக்களையும் நான் சந்தித்து வருகின்றேன். நான் கேள்விப்பட்டதிற்கு மேல் அனர்த்தங்கள் நடந்திருப்பதை நேரில் கண்டு கொண்டேன். பல்வேறு இடங்களிலிருந்தும் நான் பெற்ற சாட்சியங்களின் மூலம், இராணுவக் கெடுபிடிகளால் மக்கள் பட்ட துன்பங்களை உணர முடிகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானம் தொடர்ந்தும் நிலைக்க வேண்டும். அதற்காக பிரசைகள் குழுக்கள் மக்கள் மத்தியில் இனக் குரோதங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு முன்னின்றுழைக்க வேண்டும் என்றார். (உ-84)

### பாரதிபாஷா பாடசாலை திருத்தப்படவில்லை

கொக்குவில், செப் 27

ஷெல் தாக்குதலினலும், விமானக் குண்டு வீச்சினலும் சேதமடைந்த யாழ் பெரியகடை பாரதிபாஷா பாடசாலை இன்னும் திருத்தப்படவில்லை.

தற்பொழுது யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் ஒரு பகுதியில் இப்பாடசாலை இயங்கி வருகின்றது.

மிகக்குறைந்த அளவு நிதியே கல்வித் திணைக்களத்துக்கு புனர்வாழ்வு அமைச்சினல் ஒதுக்கப்பட்டதால் பாரதிபாஷா பாடசாலைக்கு இதுவரை திருத்துவதற்கோ, தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கோ பணம் வழங்கப்படவில்லை.

இதனல் இப்பாடசாலை வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் ஒருபகுதியிலேயே தொடர்ந்தும் இயங்கவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. (இ.69)

NATIONAL LIBRARY OF SRI LANKA 15/09/2023 11:13:31

**உதய சங்கற்பம்**

அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்! பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல.

— பைபிள்.

**உதயன்**

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி21805
யாழ்ப்பாணம். 22072
27. 9. 1987 த. பெ. இல:- 23

# தியாகச்சுடர் திலீபன்

திலீபன் வீர சுவர்க்கம் அடைந்து விட்டான். தமிழ் மண்ணுக்காக, அவர்களின் நல்வாழ்வு என்ற இலட்சியத்துக்காக தனது உயிரைத் தியாகம் செய்து விட்டான்; பரணித்து விட்டான். ஈழத் தமிழ் மண்ணின் இணையற்ற மைந்தனுகி விட்டான் அவன்.

திலீபனின் தியாகம் வேறு எவரது தியாகத்துக்கும் நிகரற்றது. ஈழத்தில் தமிழர் வரலாற்றில் புதியது. புதுமையானது.

தமிழர் உரிமைக்காகப் பல போராட்டங்கள் நடந்திருக்கின்றன. முப்பது வருடங்களாக பலவித வடிவங்களில் அந்த அரசியல் போராட்டங்கள் நடந்திருக்கின்றன.

அகிம்சை வழி— சாத்வீகவழி— போராட்டங்கள் நடந்த போதும் திலீபனைப் போல தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் போராடும் மனேவலிமை எவருக்கும் இருந்ததில்லை சாகும்வரை உண்ணுவிரதம் இருந்து தண்ணீரும் அருந்தாது மக்களுக்காகவும், மண்ணுக்காகவும் உயிர் நீத்தவர் எவருமில்லை.

கடந்த நான்கு வருடங்களில் நூற்றுக்கணக்கான போராளிகள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தார்கள். அது போர்க்களத்தில் வீர மரணம் அடைந்த தியாகம். திலீபனின் தியாகத்துக்கு வேறு பாடானது அது.

தானே தனது உடலை வருத்தி உயிர்விடுவதற்கும், அம்புபட்டு இறப்பதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. போர்க்களத்தில் இறப்பதை விட நோன்பு இருந்து அணு அணுவாய் இறப்பதற்கு தளர்வற்ற மனேவலிமையும், நெஞ்சுறுதியும் மிக அதிக அளவில் தேவை. அந்த வகையில் திலீபனின் தியாகம் தன்னிகரற்றது; தனித்துவமானது.

திலீபனின் தியாகம் தமிழர் அரசியல் வரலாற்றில் புதிய அத்தியாயம் படைத்திருக்கிறது என்பது ஒருபுறம்.

தமிழ் மக்கள், தமிழ் இளைஞர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் மனஉறுதி மிக்கவர்கள் என்பதைத் திலீபனின் மரணம் உலகுக்கு எடுத்துக் காட்டியிருக்கிறது.

நவீன ஆயுதம் கொண்டு மட்டுமல்ல, மகாவல்லமை பொருந்திய அகிம்சை ஆயுதத்தை ஏந்தி கட்டுப்பாடாகப் போராட வல்லவர்கள் என்ற சாதனையைத் திலீபனே செய்து காட்டியிருக்கிறான். அயர்லாந்தில் பொபிசாண்ட்ஸ் இருந்தது போலவே ஈழத்தில் ஒரு திலீபன் இருந்தான் என்று வரலாறு பெருமைப்பட இடமுண்டு.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் இராணுவத்தை, வீரத்துடனும் தீரத்துடனும் எதிர்த்துப் போராடித் தோற்கடிக்க வல்லவர்கள் தமிழ் இளைஞர்கள் என்ற சாதனையுடன், திலீபனின் சாதனையும் தமிழரின் விடுதலை வேட்கையை உயர்த்திக் காட்டிவிட்டது.

திலீபன் தனிமனிதன் அல்லன்; விடுதலை இயக்க வீரன் மட்டும் அல்லன். தமிழ் மக்களின் நெஞ்சுறுதியின் வீரச்சின்னம் அவன்.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும்; தமிழர் மண்ணை எவருக்கும் விட்டுக் கொடுக்கக்கூடாது; அவர்கள் தங்களைத் தாங்களே ஆளவேண்டும் என்ற உயரிய இலட்சியங்களுக்காகவே திலீபன் தன்னை மெழுகுவர்த்தியாக்கி, தமிழர் வாழ்வில் ஒளிபரப்பத் திடசங்கற்பம் கொண்டான்.

அந்த மன உறுதியையும், மக்கள் பற்றையும், மண் பற்றையும் ஒவ்வொரு வரும் வளர்த்துக் கொள்வதே அவனுக்குச் செய்ய வேண்டிய — செய்யத் தகுந்த அஞ்சலி. வெறும் கறுப்புக் கொடி கட்டுதலும், அஞ்சலிக் கூட்டம் வைத்தலும் அவனது இலட்சியத்தை அடைய உதவா.

ஆர்ப்பாட்டங்களோ, வன்செயல்களோ, பயன்தரா. அவை எமது சொத்தை நாமே அழிப்பதாக முடியும். களங்கமற்ற மண் பற்றும், மக்கள் பற்றுமே திலீபன் எனும் தியாகச் சுடருக்கு நாம் செய்யக்கூடிய கைமாறு.

# கறுப்பு இனச் சிறுவர் தென் ஆபிரிக்க சிறையில் சித்திரவதை

ஹராரே, செப்.26

தென் ஆபிரிக்காவில் கைதான கறுப்புநிறச் சிறுவர்கள் சிறைகளில் சித்திர வதைப்படுத்தப் படுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

சிம்பாப்வே தலைநகரில் நடந்த நிறவேற்றுமைக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் பேசிய பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவரின் மனைவியான திருமதி நீல்கின்ஞெக் இக்குற்றச்சாட்டை சுமத்தினுர்.

11 வயதுச் சிறுவன் ஒருவனுக்கு மின்சார அதிர்ச்சி கொடுக்கப் பட்டது.

இன்ஞெரு சிறுவன் பிரிட்ஜுக்குள் சிலமணி நேரம் அடைத்து வைக்கப்பட்டான்.

இன்ஞெரு சிறுவன் பிரகாசமான சூரிய வெளிச்சத்தைக் கண்கூசாமல் பார்க்க நிர்ப்பந்திக்கப் பட்டான்.

இப்படி திருமதி கின்ஞெக்தெரிவித்தார்.

(இ-எ

✯ பிஜியில் மீண்டும் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது

# உலகநாடுகள் பலத்தகண்டனம்

சுவா, செப் 26

பிஜியின் ஆட்சியை இராணுவம் கைப்பற்றியதை உலக நாடுகள் பல கண்டித்துள்ளன.

பிஜியினுடனுன இராஜதந்திர உறவுகளை மீண்டும் பரிசீலனை செய்யப்போவதாக ஆஸ்திரேலியாவும் நியூஸிலாந்தும் அறிவித்துள்ளன.

தேவை ஏற்படுமாஞல் பிஜியில் இருந்து தங்கள் பிரஜைகளைத் திருப்பி அழைக்கப் போவதாக இரண்டு நாடுகளும் தெரிவித்துள்ளன.

இரண்டாவது நாளாக சனிக்கிழமையும் பிஜியினுடனுன வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப் பட்டுள்ளன.

இந்தியாவும் பிஜி இராணுவத்தின் புரட்சியைக் கண்டித்துள்ளது.

காமன்வெல்த் அமைப்புச் செயலாளர் நாயகம் ஸ்ரீதத் ரம்பாலும் கண்டனம் தெரிவித்திருக்கின்றுர்.

கவர்னர் ஜெனரல் தனது வாசஸ்தலத்தில் இருந்தாலும் வெளியே இராணுவக்காவல் போடப் பட்டுள்ளது.

கடந்த மே மாதம் முதலாவது இராணுவப் புரட்சியை நடத்திய இராணுவத் தளபதி கேர்ணல் சித்திவெனி ரபுக்காவே சென்ற வியாழக்கிழமை இரண்டாவது இராணுவப் புரட்சியை நடத்தினுர்.

பழங்குடியினர் கட்சி இந்திய வம்சாவளியினர் கட்சி ஆகியவற்றுக்கு சமமான பிரதிநிதித்துவம் கொடுத்து காபந்து அரசு ஒன்றை கவர்னர் ஜெனரல் அமைக்க முயற்சி எடுத்து வரும் சமயத்தில் இரண்டாவது புரட்சி நடத்தப்பட்டது.

முதலாவது புரட்சி நடத்தப்பட்டதன் நோக்கத்தை அடையக் கூடிய விதத்தில் அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகள் அமையவில்லை என்று கேர்னல் ரபுக்கா சொன்ஞர்.

காபந்து அரசு பற்றி நாட்டு மக்களுக்கு உரையாற்ற பீஜி வாஞெலி நிலையத்துக்குச் சென்ற கவர்னர் ஜெனரல், வாஞெலி நிலையத்தை முற்றுகையிட்ட இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

இரண்டு பத்திரிகை அலுவலகங்களும் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன.

கவர்னர் ஜெனரல் நிலை என்ன என்று தெரியவில்லை. முன்ஞள் பிரதமர் டாக்டர் பவித்திரா தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார் என்று ஒரு செய்தி தெரிவித்தது.

பிஜிக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் இடையேயான சர்வதேசத் தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டது. உடனடியாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

பிஜியில் என்ன நடைபெறுகின்றது என்பதை வெளி உலகம் அறிந்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. (இ-எ)

## வெளி உலகில்

சாட் லிபிய யுத்தம்:

# அமைதிப்படையை யுத்தமுனைக்கு அனுப்புக நைஜீரியா கோரிக்கை

லாகோஸ், செப். 26

சாட் லிபியா யுத்தத்தை நிறுத்த பிரச்சினைக்குரிய எல்லைப்புறப் பகுதிக்கு அமைதிப்படை ஒன்றை அனுப்புபடி நைஜீரியா, ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தைக் கேட்டுள்ளது.

இந்த எல்லைத்தகராறு பற்றி விசாரித்துத் தீர்ப்பளிக்க. ஒற்றுமை ஸ்தாபனம் ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தை நாடவேண்டும் என்றும் நைஜீரியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

சாட், சண்டையை நிறுத்திஞல், பிரச்சினைக்குரிய பகுதியில் இருந்து படைகளை விலக்கத் தயாராக இருப்பதாக லிபியா அறிவித்து இருக்கின்றது (உ-எ)

## தொழிற் கட்சி சிக்கன நடவடிக்கை

லண்டன், செப் 23

சிக்கன நடவடிக்கையாக பிரிட்டிஷ் தொழிற்கட்சி தனது அலுவலகங்களில் ஆட் குறைப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

மூன்று பத்திரிகைகளை மூடிவிட்டது.

இதனை ஆட்சேபித்து தொழிற்கட்சி அலுவலகங்களில் பணியாற்றும் ஏனைய ஊழியர்கள் கடந்த செவ்வாய்க் கிழமையில் இருந்து வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். (இ-எ)

## பிரேஞ்சு அரசியல்வாதி அனுமதிக்கப்பட்டார்

லண்டன், செப். 26

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் கன்சர்வேட்டிவ் கட்சி மாநாட்டில் கலந்து கொள்ள பிரெஞ்சு அரசியல்வாதி ஒருவர் அனுமதிக்கப்பட மாட்டார்.

கட்சித்தலைவர் நோர்மன் ரெபிட் இதனைத் தெரிவித்தார்.

நாஸிக் குற்றவாளி என்று சந்தேகிக்கப்படும் அந்த அரசியல்வாதியை, அவர்கள் சார்ந்துள்ள ஸ்தாபனத்தின் பிரதிநிதியகவோ அல்லது அவதானியாகவோ கலந்து கொள்ள அனுமதிக்கப் போவதில்லை இப்படி திரு. ரெபிட் தெரிவித்தார்.

பிரெஞ்சு அரசியல்வாதிக்கு அழைப்பை அனுப்பியவர் கன்சர்வேட்டிங் கட்சியின் பிரமுகர் ஒருவர்.

"அந்த அரசியல்வாதிக்கு விடுக்கப்பட்ட அழைப்பு வாபஸ் வாங்கப்படவில்லை" இப்படி அப்பிரமுகர் சொன்ஞர்

# பெரு நாட்டில் அவசரகாலச் சட்டம்

லிமா, செப். 26

பெரு நாட்டின் 5 மாநிலங்களில் அவசரகால இராணுவச் சட்டம் பிறப்பிககப்பட்டுள்ளது.

அரசுக்கெதிரான கிளர்ச் சிக்காரர்களின் வன் செயல்கள் அதிகரித்து வருவதைத் தடுக்க ஜனுதிபதி அலன்கார்ஸியா இச்சட்டத்தை பிறப்பித்தார்.

அவசரகாலச்சட்டம் அறுபது தினங்களுக்கு ஒரு தரம் புதுப்பிக்கப் படவேண்டும்.

அவசரகாலச்சட்டத்தின் கீழ் அனுமதி பெருமல் தேடுதல் நடத்தவும் கைது செய்யவும் விசாரணையின்றித் தடுத்து வைக்கவும் பல அதிகாரங்கள் இராணுவத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. (உ-எ)

## ஹிட்லரின் டைப்ரைட்டர் ஏலத்தில்

மியூனிச், செப் 26

சர்வாதிகாரி ஹிட்லர் பாவித்த டைப்ரைட்டர் ஏலத்துக்கு வருகின்றது.

நவம்பர் மாதம் 6 ஆம் திகதி மேற்கு ஜேர்மனில் இந்த ஏலம் நடைபெறும்.

குறைந்தது 30 ஆயிரம் டாலருக்கு அந்த டைப்ரைட்டர் ஏலம் போகலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

ஹிட்லர் எழுதிய மெயின் காம்ப் (எனது போராட்டம்) புத்தகத்தின் முதல் பதிப்பும் அவரின் கையெழுத்துடன் ஏலத்துக்கு வருகின்றது.

குறைந்தது 11 ஆயிரம் டாலருக்கு அப்புத்தகம் ஏலத்திற்குப் போகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-எ)

## பலர் கரை திரும்பினர்

திருவனந்தபுர, செப் 29

கேரள மாநிலக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் காணுமற் போனதாக அறிவிக்கப் பட்ட 400 பேரில் பெரும்பாலானேர் கரை திரும்பிவிட்டனர் என்று வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## மீண்டும் பி. எல். ஓ. அலுவலகம்

அபுதாபி, செப். 26

எகிப்தில் மீண்டும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதியை எகிப்திய அரசு வழங்கிவிட்டது.

நான்கு மாதங்களுக்கு முன்னர் இந்த அலுவலகங்கள் எகிப்திய அரசின் உத்தரவின் மீது மூடப்பட்டன, (இ-எ)

## இந்துக்கள் புனித தீர்த்தம்

புதுடில்லி, செப் 27

ஹரியான மாநிலத்தில் உள்ள குருஷேத்திரத்தில் கடந்தபுதன் நிகழ்ந்த சூரிய கிரகணத்தின் போது பத்துலட்சத்துக்கு மேற்பட்ட இந்துக்கள் புனித தீர்த்த மாடினர்.

அதே நேரத்தில் விஞ்ஞானிகள், வானசாஸ்திரிகள் அவதான நிலையங்களில் இருந்து 63 நிமிட சூரியகிரகணத்தை உன்னிப்பாக ஆராய்ந்தனர். [இ-எ]

# தியாகங்களின் திருஉருவே! எம்திலீபனே!

குமார்தனபால்

நெஞ்சில் உரமோடு
நேர்மை விழியோடு
இந்த தேசத்தை நேசிப்பவனே!
தியாகங்களின்
திரு உருவே;
எம் திலீபனே!

விலாசம் கேட்டுக்கொண்டு
வெற்றி நம் வீடுதேடி வருவதில்லை
என்பதை விளக்குவதற்கு
விறகாகிப் போனவனே!

சாவிற்குப் பிறகும்
சாகாவரம் பெற்றவனே?
சரித்திரத்தின் கவிதைக்கடலே!
ஒரு காலத்தில்
விஞ்ஞானிகளின் கணிப்பின்படி
சூரியப் பூவே உதிர்ந்து
இந்தப் பூமி அழிந்தாலும்
தியாகங்களின் தீபமாகிய
திலீபன் அழியமாட்டான்.

சொந்த ஊரில்
உன் ஜெனனக்குறிப்பு
எழுதப்பட்டாலும்
ஒரு புதிய உலகிற்கு
நீ குறிப்பு எழுதுகிருய்

கையிலே விளக்கை
ஏந்திக்கொண்டு
மனிதர்களைத் தேடிய
கிரேக்க ஞானியைப்போல்
கண்களிலே ஒளியை
சுமந்து கொண்டு
நம் மண்ணின் மீட்பிற்காய்
இரையாகிக் கிடப்பவனே!
சுதந்திரம் நாம் பெற்றேமாம்
சொல்லுகின்ருர்
முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும்
முடிந்ததென்ன......?
ஒப்புக்குத் தானும் சொல்ல
ஒன்றுமில்லைத் தோழா!

உன்தாய் உனக்கு
தாலாட்டுப் பாடி
தன் பாலை ஊட்டும் போதே
தமிழீழத் தாகப் பாலையும்
சேர்த்துத் தந்திட்டதிஞல் தான்
இன்று நீ...
எம் இனத்தின் விடுதலைக்காய்
உறையாகிப் போஞயோ?

உனது மரண ஊர்வலம்
ஒரு தேசிய கீதத்தையே
உருவாக்கி விடும் தோழா!

மரணம் முடித்து வைக்கும்
உன் கதைக்கும் முடிவில்லை
எம் துயரும் முடிவதில்லை

நம் நாட்டில்
என்றும் நீ
காற்ருகக் கலந்திரு
புயலாக வீசு!
கடலாகக் கொந்தளி
போரிடும் நம் தோழர்களின்
உயிரோடு உயிராகு
இன்றும் நாம்
நம் நம்பிக்கையை
இழக்கவில்லை
அது போதும் உனக்கு

(திலீபனின் நான்காம் நாள் உண்ணு விரதத்தின் போது பாடப்பெற்ற கவிதையில் ஒரு பகுதி)

# சிங்களவர்களின் உரிமையை ஒப்பந்தம் பறிக்கிறது

## அதனுலேயே எதிர்க்கிறேம் சிறிமா கூறுகிருர்

கொழும்பு, செப். 27

இந்த நாட்டில் எங்கு சென்று வாழவும் சிங்களவருக்கு உரிமையுண்டு. இந்த உரிமையைப் பறிப்பதாக இந்திய - இலங்கை ஒப்பந்தம் அமைந்து உள்ளது. அதனுல்தான் ஒப்பந்தத்தை எதிர்க்கின்றேம்,

இப்படிச் சொன்ஞர், சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

மாவனெல்லையில் நடந்த பொதுக்கூட்டத்தில் திருமதி பண்டாரநாயக்கா பேசினுர்.

அவர் மேலும் சொன்னதாவது;

நாடாளுமன்றத்தில் ஒப்பந்தம் பற்றிய சட்ட நகல் வருவதை எப்படியும் தடுத்து நிறுத்த முயற்சிப்போம்.

முதலில் சட்டநகலை எதிர்த்து நீதிமன்றத்தில் வாதிடுவோம். அதற்கான ஏற்பாடுகளில் எமது சட்டத்தரணிகள் ஈடுபட்டுஉள்ளனர்.

நாடாளுமன்றத்தில் எமது கட்சியின் எட்டு எம்பிக்களே உள்ளனர். அவர்கள் எதிர்த்து சட்ட நகலைத் தோற்கடிக்க முடியாது.

ஆகவே யு. என். பி. எம்பிக்களை சட்டநகலுக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டாம் என்று மக்கள் கோர வேண்டும் சிங்கள எம்பிக்கள் எதிர்த்து வாக்களித்து சிங்களவரின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்டதன் மூலம் சமாதானத்தைக் கொண்டு வரமுடியாது.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மை சாயும் முன்னரே இந்தியப்படை இலங்கைக்கு வந்து விட்டது.

உலகில் சிங்களவர் வாழ வேறு நாடு இல்லை என்பதை ஜனுதிபதி மறந்துவிடக் கூடாது.

இப்படித் திருமதி பண்டாரநாயக்கா சொன்ஞர்.

[ஒ-எ]

## சோர்ந்து------

[3ம் பக்கத் தொடர்ச்சி]

சாப்பாட்டு அறை, நீங்கள் வேலை செய்யுமிடங்களிலெல்லாம் ஒட்டுங்கள். ஜெபிக்கவேண்டும் என்ற சிந்தனை உங்கள் உள்ளத்தில் அக்கினித் தீயாக வேலை செய்யட்டும்.

அவ்வப்போது ஆங்காங்கே முழங்காற்படியிடுங்கள். ஜெப நண்பர்களை உருவாக்கி ஜெபிக்கவேண்டிய அவசியத்தை விளக்குங்கள். ஜெபத்திற்குக் கர்த்தர் பதில் தருவேன் என்று கூறியிருக்கும் வாக்குத்தத்தங்களையெல்லாம் மனப்பாடம் செய்து விடுங்கள். எங்கெங்கே உண்மையாய் ஆவியோடு ஜெபிக்கும் ஜெபக்குழுக்கள் இருக்கிறதோ, அங்கெல்லாம் ஓடிப்போய் கலந்து கொள்ளுங்கள்.

நீங்கள் ஜெபிக்கும் போது கெத்செமனேத் தோட்டத்தில் கிறிஸ்துவோடு கூடச்சேர்ந்து ஜெபிப்பதைப்போல எண்ணிக்கொள்ளுங்கள். கிறிஸ்து கெத்செமனேத் தோட்டத்தில் அதிக ஊக்கத்தோடே ஜெபித்த ஜெபம் உங்கள் காதுகளிலே விழுந்து கொண்டேயிருக்கட்டும். நீங்கள் ஜெபவீரராய் மாறுவது உறுதி. [இ]

## யாழ் மாவட்ட - - -

(3ஆம்பக்கத்தொடர்ச்சி)

பூட்ட சரியான கொழுக்கிகள், தடைக் கட்டைகள் போடப்பட வேண்டும். மலசல கூடங்கட்கு மரத்தால் செய்த தடுப்புகள் வைத்து 'மறைவு' செய்வது கூச்சமான நிலையை நீக்கும்.

கச்சேரிக்கு வரும் பொதுமக்கள் விறுந்தைகளில் இருக்கப் போதிய வாங்குகளும் இல்லை.

NATIONAL LIBRARY OF SRI LANKA 15/09/2023 11:13:31

சிறந்த றெடிமேட் ஆடைகள்
நீங்கள் விரும்பும் கண்கவர்
வண்ணங்களில் நவீன ரக
றெடிமேட்
உடைகளைத் தேர்ந்தெடுக்க
சிறந்த இடம்

மயூரா சென்ரர்
13 B நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

27 09 - 1987 ஞாயிற்றுக்கிழமை

நியாயமான விலைகளில்
நவீன ஜவுளி ரகங்கள்
உங்கள் தேவைகளுக்குரிய நவீன
ரகங்களைத் தேர்ந்தெடுக்க
இன்றே வருகை தாருங்கள்

மயூரா சென்ரர்
13 B நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



திலீபனின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துமுகமாக நல்லூரில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினரை படங்களில் காணலாம்.



மகனின் பிரிவுச் செய்தி கேட்டு கதறியழும் தந்தை நாகலிங்கம் இராசையா அவரை அரவணைத்து அழுது நிற்கும் திலீபனின் மூத்த சகோதரர் அசோகன் (உ)

## டிக்ஸிற் — பிரபா

# நேற்றைய சந்திப்பிலும் தீர்க்கமான முடிவுஇல்லை

பலாலி, செப். 27

பலாலி இந்திய அமைதிப்படை முகாமின் தலைமைப் பணிமனையில் நேற்று நடைபெற்ற இந்தியத் தூதர் டிக்ஸிற்—விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் ஆகியோரின் பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் அவரவர் பகுதியில் பெறப்படவேண்டிய ஆலோசனைக்காக பின்போடப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனிடம் இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் கேட்டுக்கொண்ட விளக்கங்களுக்கும் ஆலோசனைகளுக்கும்- புலிகளின் அரசியல் குழுவுடன் ஆலோசித்து திரு. பிரபாகரன் இன்று ஞாயிற்றுக்கிழமை பதிலளிப்பார்.

அதனைத் தொடர்ந்து இந்தியத் தூதுவர் திரு ஜே என் டிக்ஸிற் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடனும்- இந்திய அரசாங்கத்துடனும் ஆலோசித்து நாளை திங்கட்கிழமை பிற்பகல் அல்லது செவ்வாய்க்கிழமை காலை முடிவுகளை வெளியிடுவதாகவும்தெரியப்படுத்தப்பட்டது.

பேச்சுவார்த்தைகளின் முடிவில் கூட்டப்பட்ட பத்திரிகையாளர்களின் மாநாட்டிலேயே மேற்படி முடிவுகள் வெளியிடப்பட்டன.

காலை 11-30 மணிக்கு பேச்சுவார்த்தை மண்டபத்தினருகில் வந்துசேர்ந்தார் இந்தியத் தூதுவர் டிக்ஸிற்.

காலை 10-05 மணிக்கே மாநாட்டு மண்டபஅறை ஒன்றில் வந்து தங்கியிருந்தார் திரு. பிரபாகரன்.

டிக்ஸிற் பிரபாகரனைச் சந்தித்து கைலாகு கொடுத்து வரவேற்ற பின்பு பேச்சுவார்த்தை மேடைக்கு இரண்டு பிரிவினரும் சென்றனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் தலைவர் திரு வே. பிரபாகரன், பிரதித் தளபதி திரு. மாத்தையா அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம், சட்டத்துறை ஆலோசகர் திரு சே. கோமடேஸ்வரன், திரு க. சிவானந்தசுந்தரம், திரு திலகர் ஆகியோரும்—

இந்தியா சார்பில் திரு ஜே. என். டிக்ஸிற்றுடன் திரு பூரி, மேஜர் ஜெனரல் ஹர்ஹீத்சிங், பிரிகேடியர் பெர்ணண்ஸ், திரு குப்தா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

காலை 11-30 மணிக்கு முதற்சுற்றுப் பேச்சுவார்த்தை ஆரம்பித்து மதிய போசனத்துக்காக 12-30 மணியுடன் நிறுத்தப்பட்டு - பிற்பகல் 2 மணிக்கு இரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பமாகி பிற்பகல் 3-30 மணிக்கு பேச்சுவார்த்தை முடிவுற்றது.

பேச்சுவார்த்தை முடிவில் திரு. பிரபாகரனும் திரு டிக்ஸிற்றும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர். அந்த அறிக்கையை திரு. டிக்ஸிற்றே வெளியிட்டார்.

''நாம் இன்று ஏறத்தாழ 3 1/2 மணித்தியாலமாகப் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

''இப்பேச்சுவார்த்தையில் முன்னைய பேச்சுவார்த்தைகளிலும் பார்க்க சிறந்தமுன்னேற்றம் காணப்பட்டது.

''திரு. பிரபாகரனால் சில விளக்கங்களும், கோரிக்கைகளும், நிபந்தனைகளும்விடப்பட்டன. நானும சில ஆலோசனைகளைத் தெரிவித்தேன்.

''புலிகளின் அரசியல் குழுவின் ஆலோசனையுடன அதற்குரிய முடிவை திரு.பிரபாகரன் ஞாயிறு எமக்கு அறியத்தருவார் அதன் பின்பு இலங்கைத் தலைவருடனும், இந்தியத் தலைவருடனும இதுபற்றி நாம் ஆலோசித்து திங்கட்கிழமை பிற்பகல் அலலது செவ்வாய் காலை முடிவினை அறிவிப்பேன்.

''இது திருபதிகரமான சூழ் நிலையைக் கொண்டுவந்து சகஜநிலையை ஏற்படுத்துமென நாம்நினைக்கின்றோம்''

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது.

உடனடியாக டிக்ஸிற் ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்கு பயணமானார் (இ-119)

வெளிநாட்டு
பிரயாண ஒழுங்குகள்

றெயிலேர்ஸ் TAILORS —
பெண்கள்
☆ குவைத் நாட்டிற்கு ☆
Hospital Cleaners, Drivers,
ஹவுஸ் மெயிட்ஸ்
☆ சவூதி அரேபியாவிற்கு ☆
உணவுடன் இருப்பிட வசதியும்
செய்து கொடுக்கப்படும்.
★ உடன் தொடர்புகொள்ளவும் ★
பாஸ்போட், பொன்ட் செய்து
கொடுக்கபபடும்

K. K. அம்பிகாபதி
கலைமணி லேன்,
கட்டப்பிராய்.
(1718)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்)லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்,யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி; 27-09-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. at 292/2 Navalar Road, Jaffna on September 27, 1987

## வீரசுவர்க்கம் ----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது உயிர் பிரியும்போது, நோன்பு மேடையில் அவரது தந்தையும், மூத்த சகோதரரும் கூட இருந்தனர்

திலீபன் இறந்தசெய்தி காட்டுத் தீபோலப் பரவியது. தமிழ்ப் பிரதேசம் எங்கும் சோகம் குடிகொண்டது.

வீடுகள், கடைகள், அலுவலகங்கள் தோறும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன. வீதிகளில், சந்திகளில் வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டன.

மக்கள் நலனுக்காகத் தன்னுயிர் ஈந்த தியாகிக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக வெள்ளம்போல் மக்கள் கூட்டம் நல்லூர் நோக்கிப் படை எடுத்தது.

திலீபனின் பூதவுடல் ''எம்பாம்'' செய்யப்பட்டு புலிகளின் இராணுவச் சீருடை அணிவிக்கப்பட்டு, பிற்பகல் 4-15 மணிக்கு உண்ணாவிரதம் இருநத மேடைக்குக் கொண்டுவரப்பட்டது.

லட்சக்கணக்கான மக்கள் இரவிரவாகத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். இச்செய்தி அச்சுக்குப் போகும்போதும் நல்லூரின் நான்கு வீதிகளிலும் நீண்ட கியு வரிசைகள் காணப்பட்டன.

இன்று திலீபனின் பூதவுடல் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் வடமராட்சியில் காலை ஆறு மணியிலிருந்து உடுப்பிட்டியில் ஆரம்பித்து வல்வெட்டித்துறை, பொலிகண்டி, திக்கம், இன்பருட்டி, வியாபாரிமூலை, நாவலடி, பருத்தித்துறை, மந்திகை, மாலிசந்தி, நெல்லியடி, துன்னாலை, மணற்காடு, குடத்தனை, நாகர்கோவில், மாமுனை, செம்பியன்பற்று, மருதங்கேணி ஊடாக பிற்பகல் 2 மணியளவில் தென்மராட்சியை அடையும்.

தென்மராட்சியில் நாவற்குழிசந்தி, கைதடி, நுணாவில், கனகன் புளியடி, சாவகச்சேரி, மீசாலை, புத்தூர், கச்சாய், கொடிகாமம், வரணி, மிருசுவில், எழுதுமட்டுவாழ், கித்தாவில், பளை, புதுக்காட்டுச் சந்தி ஊடாக ஊர்வலம் இயக்கச்சியை வந்தடையும்.

திலீபனின் பூதவுடல் இன்று இரவு 8 மணியிலிருந்து நாளைக் காலை 6 மணிவரை ஊரெழுவிலுள்ள அவரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

தியாகி திலீபனின் பூதவுடல் அவரது விருப்பப்படி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கப்படும்.

மருத்துவ பீடத்தில் பயில்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நிலையில், பல்கலைக் கழகம் செல்லாது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டவர் திரு திலீபன் என்பது குறிப்பிடத்தக்கது (அ-ஓ-10)



வீரமரணமடைந்த விடுதலை வேங்கை திலீபன். (படம் ஜெயம்)

## ● இந்திய ராணுவத்தை மறித்த மக்கள்

பலாலி, செப். 27

திலீபனின் மறைவு கேட்டு ஆத்திரமுற்ற மக்கள் வயாவிளான் சந்தியால் இந்திய இராணுவம் வெளியேற முடியாதவாறு தடைகள் போட்டு மறியல் செய்தனர்.

நூற்றுக்கணக்கான பெண்களும் - இளைஞர்களும் இந்த மறியலில் ஈடுபட்டனர்.

மறியல் நடந்துகொண்டிருந்த சமயம் இந்திய இராணுவத்தினர் சந்தியின் நாலுபுறமும் மிகத் தயார்நிலையில காவலில் ஈடுபட்டிருந்தனர்.

பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள பலாலி சென்ற திரு. பிரபாகரன் குழுவினரும் வயாவிளான் சந்திக்கு வராது வேறு வழியாலேயே வெளியேவர நேர்ந்தது. (இ-119)

## ஈரோஸ் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

நல்லுறவு பேண வேண்டும் என்று செயற்பட்ட அவரது இழப்பு வேதனையைத் தருகின்றது.

காலதாமதமின்றி இந்திய அரசு விரைந்து செயற்பட்டிருந்தால் அவரது உயிரை காப்பாற்றியிருக்க முடியும். ஆனால் அநியாயமாக அவரது உயிர் இழக்கப்பட்டுவிட்டது. இப்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பாலகுமாருக்கு . . .

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

பாலகுமார் அரசியல் பொறுப்பாளர் பரா,சங்கர் உட்பட பல ஈரோஸ் உறுப்பினர்கள் திலீபனின் பூதவுடலுக்கு நேற்றிரா அஞ்சலி செலுத்தினர். [இ-10]

## பிரபாவுக்கு--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முகத்தில் சோகம் களை கட்டியது மிகுந்த கவலையுடன் காணப்பட்டார்

இந்திய உயர்ஸ்தானிகர் திரு. ஜே, என். டிக்ஸிற் வருவதற்கு 15 நிமிடத்தின் முன்பு இச்செய்தி பிரபாகரனுக்குத் தெரிவிக்கப்பட்டது.

திரு. பிரபாகரன் இந்திய இராணுவத்தினரால் வழங்கப்பட்ட குளிர் பானத்தைக்கூட அருந்த மறுத்துவிட்டார். (இ-119)

## நிராகரிப்பு

பலாலி, செப். 27

பலாலியில் டிக்ஸிற் குழுவினருடன் பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பும் போது விடுதலைப் புலிகளின் தலைவருக்கும், ஏனையோருக்கும் இந்திய ராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கத் தயாராகினர். எனினும் இந்த இராணுவப் பாதுகாப்பைப் புலிகள் நிராகரித்தனர். (இ-119)

## லைசென்ஸ்

மோட்டார் வாகனங்களுக்கான 1988 ஆம் ஆண்டு லைசென்ஸ் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படும் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அறிவித்துள்ளார் (இ-எ)

## பஸ்களுக்கு - - -

(1ம் பக்கத்தொடர்ச்சி)

மானது என்றும் அதில் வெளிமாவட்டத்திலிருந்து டீசல் கொண்டு வரப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது

திலீபனுக்கு எமது அஞ்சலி

வீர வரலாறு படைத்து வீர சுவர்க்கம்
அடைந்த வீரவேங்கை
● திலீபனுக்கு ●
எமது வீரவணக்கம் கலந்த அஞ்சலியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

தரமான சுத்தமான அறுசுவை உணவு
மற்றும்
ஐஸ்கிறீம் வகைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

ஹோட்டல் சோபிகா
(பஸ் நிலையம் முன்பாக)
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
★ பஸ் புக்கிங், ROOM தங்குமிட வசதியும்
இங்கு உள்ளது.

## நீத்தார் பட்டியல்

### நாயன்மார்கட்டு சுந்தரம்பிள்ளை - பரநிருபசிங்கம் (பரம் மாஸ்ரர்)

நாயன்மார்கட்டு பிரபல வர்த்தகர் சுந்தரம்பிள்ளை (சின்னக்குழந்தையர்) - ஞானம்பிகை தம்பதியின் சிரேட்ட புதல்வரும் யாழ் பரமேஸ்வராக் கல்லூரி முன்னாள் பதிலதிபரும் ஓய்வு பெற்ற தொழில் முன்னிலைப்பாடசேவைககாலக் கல்வி ஆலோசகரும் பாலர் கல்வி விரிவுரையாளரும் சமூக சேவையாளருமான பரநிருபசிங்கம் (பரம் மாஸ்ரர்) இறைவனடி சேர்ந்தார். அவர் கேதீஸ்வரன் (இறையனார்) திருமகள் (அபிவிருத்தி நிதியம), நாமகள் (ஆசிரியர், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் , ஈசனார் (தொழில் நுட்பக் கல்லூரி), சேந்தனார் (பென்குவின் நிறுவனம்), மலைமகள் (யாழ் இந்து மகளிர் கல்லூரி), பூமகன் (கனகரத்தினம் ம. ம வி) இறைமகள் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சாரதாவின் அன்புக் கணவரும், பாலசிங்கம், கனகம்மா, விஜயலட்சுமி, நாகேஸ்வரி, சச்சிதானந்தம், அன்னலட்சுமி, விமலாதேவி ஆகியோரின் சகோதரருமாவார்.

மரணச் சடங்குகள் இன்று (1987-09-27) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 00 மணிக்கு 102 (310) செம்மணி வீதி இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்தில் ஈமச் சடங்குகள் இடம்பெறும்.

தகவல்:
கேதீஸ்வரன் (இறையனார்)